# இணுவில்
# செகராசப்பிள்ளையார்
# பிள்ளைத்தமிழ்



பண்டிதர்

ச. வே. பஞ்சாட்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இணுவில் செகராசப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்

பாடியவர்:
பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

வெளியீடு:
பொன்னெழுத்துப் பதிப்பகம்
இணுவில் மேற்கு,
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்விபரம்:

நூல்:இணுவில் செகராசப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ்
ஆக்கியோன்: பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்
முதற்பதிப்பு: 1988
இரண்டாம் பதிப்பு: 2018
பதிப்புரிமை: ப.செங்கோடன்-திருமதி சி.உமாவஞ்சி
தட்டச்சு-வடிவமைப்பு-அட்டை:தீவகன்
வெளியிடுபவர்கள்: ப.செங்கோடன்-சுவிஸ்
திருமதி சி.உமாவஞ்சி-ஜேர்மனி
வெளியீட்டு நிலையம்: பொன்னெழுத்துப் பதிப்பகம்
அச்சகம்:வைரஸ் பிறின்ரேர்ஸ்
கே.கே.எஸ் வீதி, இணுவில்

## Book Details:

| | |
|---|---|
| **Book:** | **Inuvil Seharasappillaiyar Pillaiththamil** |
| **Author:** | **Pandit S.V.Panchardcharam** |
| **First Edition:** | **1988** |
| **2nd Edition:** | **2018** |
| **Royalty:** | **P.Sengodan**<br>**Mrs S.Umavanchi** |

**Type Setting/Designing/Cover Page: Theevagan**

| | |
|---|---|
| **Publishers:** | **P.Sengodan-Swiss**<br>**Mrs S.Umavanchi-Germany** |
| **Publishing House:** | **PonEluththup Pathippakam-Inuvil** |
| **Press:** | **Virus Printers, K.K.S Road-Inuvil** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இணுவில் மேற்கு,செகராசசேகரப் பிள்ளையார் திருக்கோவில்!

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் 1988இல் வழங்கிய

# முன்னுரை

பிரபந்த வகைகளுக்குள் பிள்ளைத் தமிழும் ஒன்றாகும். இதற்குப் பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி என்ற பெயர்களும் உள. பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகப் பாவனை செய்து பாடப்படும் பிள்ளைத் தமிழில் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தாலாட்டு சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை என்ற உறுப்புகளை அமைத்துப் பாடப்படுவதாகும். இவற்றுள் இறுதி மூன்று உறுப்புகளுக்குப் பதிலாக அம்மானை, கழங்கு, ஊசல் என்பவற்றை அமைத்துப்பாடப்படுவது பெண்பாற் பிள்ளைத்தமிழாகும். ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த இணுவில் சின்னத்தம்பிப் புலவர் பாடிய இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழே ஈழத்தில் காலத்தால் முற்பட்டதாகும். தொடர்ந்து 19ஆம் நூற் றாண்டில் ஐந்து பிள்ளைத்தமிழ்களும், இருபதாம் நூற்றாண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதுக்கு மேற்பட்டவையும் பாடப்பட்டுள்ளன.

இந்துக்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் மேற்கொள்ளும் முயற்சிகள் இடையூறின்றி நிறைவேற வேண்டும் என்ற பிரார்த்தனை யுடன் வழிபடுவதே பிள்ளையார் வழிபாடாகும்.

இந்த அடிப்படையிலேயே பிள்ளையாருக்கு விக்ன விநாயகர் என்ற பெயரும் ஏற்பட்டது. பிள்ளையார் அவதாரம் பற்றிய கதைகள் புராணங்களிற் கூறப்பட்டுள்ளன. சமயகுரவர்களும், திருமூலரும் பிள் ளையாரைப் பாடியுள்ளனர். பிற்காலப் பிரபந்தங்களில் காப்புக்குரிய கடவுளாகப் பாடப்பட்டுள்ள பிள்ளையார் மீது தனித்தனிப் பிரபந் தங்களும் பாடப்பட்டுள்ளன. விநாயகர் வழிபாட்டில் சுக்கிரவாரம், சதுர் த்தி விரதம், விநாயக சஷ்டிவிரதம் என்பன மிக முக்கியமானவை.

ஔவையார் விநாயகர் மீது பாடிய விநாயகர் அகவல் போன்ற நூல்கள் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியதோர் இலக் கியமே பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் இணுவில் செகராச சேகரப்பிள்ளையார் மீது பாடிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமாகும். பண்டி தர் ச.வே.ப. அவர்கள் நாவலர் கல்விப் பாரம்பரியத்தில் வந்த தமிழ்ச் சீலர். சந்தக்கவி பாடவல்ல புலவர் பெருமகன். அண்மைக் காலமாக அன்னாரின் கவித்துவத்தை அகில இலங்கைக் கம்பன் கழகக் கவி யரங்குகளிலே கேட்டுச் சுவைத்த ஆயிரக்கணக்கானோரில் நானும் ஒருவன். புலவர் பஞ்சாட்சரம் அவர்களின் இலக்கிய ஆக்கங்களில் இதுவரை எழிலி, தண்டலை, சின்னஞ்சிறு கதைகள், இன்பவானில், முக்கோட்டத் துதி, இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் என்பன நூல் களாக வெளிவந்துள்ளன.

இந்த வரிசையில் இப்பொழுது இணுவில் செகராசப் பிள்ளை யார் பிள்ளைத்தமிழ் என்ற நூல் வெளிவருகிறது. தம் கவிதைத் திறத் தால் எழிலி காவியம் மூலம் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற கவிஞர் பஞ்சாட்சரம் அவர்கள், தம் மாணவர் குழாத்தைத் தமிழ் நெறியில் ஆற்றுப்படுத்திய பெருமைக்குரியவர். சைவத்தைத் தூய்மை நெறியில் வளர்த்துப் பேணிய கிராமங்களில் இணுவில் சிறப்புப் பெறுவதாகும். இங்கு செகராச சேகரப்பிள்ளையார், பரராச சேகரப்பிள்ளையார், கரு ணாகரப்பிள்ளையார் என்ற பழமைமிக்க மூன்று பிள்ளையார் கோயில் களுள. அவற்றுள் செகராச சேகரப்பிள்ளையார் மீது பாடப்பட்டதே இப் பிள்ளைத்தமிழ் ஆகும். இத்தலத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்த னவென ஆன்றோர் கூறுவர். ஆரியச் சக்கரவர்த்திகளின் தமிழரசு வட இலங்கையில் நிலவியபோது சிங்கைச் செகராச மன்னனின் ஆணைப்படி இக்கோவில் கட்டப்பட்டதென அறியப்படுகிறது.

பிள்ளையார் இவருக்குக் கனவிற் தோன்றி இப்பிள்ளைத் தமி ழைப் பாடவைத்தார் என்பது அருள்செறிந்தது ஆகும். முதலாவது காப்புப் பருவத்தில், சிவன், பார்வதி கங்கை, கந்தன் விட்டுணு, பிரமன், வீரபத்திரர், இந்திரன் முதலிய தெய்வங்கள் துதிக்கப்படு கின்றன. அடுத்துச் செங்கீரைப் பருவம் அறுசீர் விருத்தத்தால் அமைந்துள்ளது. பிள்ளைத்தமிழிற் செங்கீரைப் பருவம் பாடுவது மிகவும் சிக்கலானது என்பர். ஆனால் பண்டிதர் ச.வே.ப அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திச் சுவைததும்ப இதனைப் பாடியிருத்தல் அவர்தம் சிறப்புக்கு எடுத்துக்காட்டு!

**"நிறைவுற் றருளும் தாய்நெஞ்சே!**
**நிமலா ஆடுக செங்கீரை!**
**குறைகள் தீர்த்தென் நெஞ்சத்தைக்**
**குழைத்தாய் ஆடுக செங்கீரை!"**

எனவரும் பாடலடிகளின் மூலம் புலவரின் பக்தியுணர்வும், பாவனையும் வெளிப்படுகின்றன. மூவேந்தர் நெறிவந்த செகராச சேக ரன் எடுப்பித்த கோயிலில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரை,

**"சேல்புலிவில் சின்னச் செந்தமிழின் செகராசன்**
**கால்கொள் தளிவாழுங் கற்கண்டே தாலேலோ"**

எனப்பாடுதலும் நோக்கற் பாலதாகும்.

இலக்கிய கர்த்தா தான்வாழும் சமூகச் சூழலின் பல்வேறு நிலைப்பட்ட தாக்கங்களினாலும் தூண்டப்படுகின்றான். அவற்றினால் உந்தப்பட்டே தனது ஆக்கங்களை வெளிப்படுத்துகிறான். பண்டிதர் ச.வே.பவும் தம து சமகால அரசியல் அட்டகாசங்கள், கொடூரங்கள் என்பவற்றையும் பிள்ளைத்தமிழிற் பாடத் தவறவில்லை என்பதை நூலோட்டத்திற் காணக்கூடியதாக இருக்கின்றது.

**"எடுத்தெறிந்தார் அந்நியர்கள் எத்தனையோ உன்சிலைகள்**
**இடித்தெறிந்தார் அந்நியர்கள் எத்தனையோ இன்தளிகள்.."**

எனவரும் பாடலடிகள் மேற்கூறிய கருத்தை நிரூபிக்கின்றன.

நாவலர் வழித்தமிழ்ப் புலமையும், சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றுயர்ந்த பண்டிதர் ச.வே.ப. அவர்களின் இந்த இரண்டாவது பிள் ளைத் தமிழில் புலமை மேலோங்கி நிற்கின்றது. இந்நூலின் மூலம் பண்டிதர் அவர்களிடம் புராணக் கதைகளிலுள்ள ஈடுபாடும், அவற் றைக் கவிதையிலே தரும் கவிதா உணர்வும், விநாயகப்பெருமான் மீதுள்ள பக்தி மேம்பாடும், நம்பிக்கையும் மிகுந்து காணப்படுகின்றன என்பது தெளிவாகும்.

இணுவில் தந்த பண்டிதர், புலவர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்க ளுக்குத் தமிழ்த்தாயின் கடாட்சம் மேலும் பெருகவேண்டும். பழகு தமி ழில் பல நூல்கள் தரவேண்டும். ஈழத்தமிழ் மண்ணின் புகழ் மேலோங் கப் பாடவேண்டும் என வாழ்த்துகிறேன்.

கலாநிதி இ.பாலசுந்தரம்
(சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.
05-09-1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சிலர் தாம் செய்வது குற்றம் என்று அறியாமல் குற்றம் செய்கிறார்கள். சிலர் தாம் செய்வது குற்றமென்றறிந்தும் தம்மைக் கட்டுப்படுத்த முடியாமற் குற்றஞ் செய்கிறார்கள். இவ்விருவகைக் குற்றவாளிகளும் எங்கும் உள்ள, என்றுமுள்ள, எல்லாம் வல்ல ஒருகடவுள் நிச்சயமாக உண்டு என்ற பேருண்மையை உறைப்பாக உணர வைக்கப் படுவார்களேயானால், நம்குற்றங்களுக்காக அக்கடவுளால் நாம் நிச்சயம் தண்டிக்கப்படுவோம் என்பதைத் தெளிய வைக்கப் படுவார்களேயானால் அவர்கள் நிச்சயமாகக் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு வேண்டிய அறிவும், மனக்கட்டுப்பாடும் கைவரப்பெற்றுக் குற்றங்களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் தம்மைக் காத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இம்மையும் மறுமையும் நிம்மதி மிக்கவையாக அமைந்துவிடும். இவ்வாறான தெய்வ நம்பிக்கை, அற நம்பிக்கை சித்திக்கப் பெறாதவர்கள் தந்திரத்தின் மீதும், தம்புத்தி சாதுரியத்தின் மீதும் அதீதமான, குருட்டுத்தனமான நம்பிக்கை வைத்து, ஏராளமாகப் பாவச் செயல்களில் ஈடுபடுவர். இத்தகைய கடவுள் விரோதிகள்-நாத்திகர்களே முழு மனித குலத்தையும் பூண்டோடு அழிக்கக் கூடிய, மனித குலத்தின் மிகப்பயங்கரமான எதிரிகள்-கொள்ளிக்கட்டைகள்.

ஆசைகள் வெறிகளால் உந்தப்பட்டு அக்கிரமங்கள் சூழ்ச்சிகளில் ஈடுபடும் நாத்திகம். ஒரு மதத்தவன் இன்னொரு மதத்தை விமர்சிப்பதன் மூலம் இன்னொரு மதத்தவனின் கடவுள் மீதான நம்பிக்கையைச் சிதைத்து அவனை நாத்திகனாக ஆக்கிவிடும் நாத்திகம், பொது அமைப்புகளில் மதச் சார்பின்மைச் சட்டத்தின் மூலம் கடவுள் வழிபாட்டுக்குத் தடைபோட்டு , ஏராளம் அங்கத்தவர்களின் கடவுள் நம்பிக்கையைத் தேய்த்தழித்துவிடும் நாத்திகம்,

ஆண்டவனை மட்டும் வணங்கிக் கொண்டு அறவொழுக்கம் தவறிநடக்கும் பூச்சாண்டி' நாத்திகம், மனிதக் குறைகுடமான தன்னால் எக்குற்றமும் செய்யாது வாழமுடியும் என்ற அசட்டுத் துணிச்சலால், கடவுளை வழிபட மறுக்கும் அகந்தை நாத்திகம், மொத்தத்தில் கடவுளை எண்ணித் தொழுதே கண்விழிக்கும் மரபை முற்றாகக் கைவிட்டுவிட்ட ஒட்டுமொத்தத் தமிழினத்தின் நாத்திகம்.

இவற்றின் மூலம் சபிக்கப்பட்ட, படுமோசமான-அழிப்புக்குரிய இனத்தலைவிதியைத் தனக்குத்தானே படைத்துக்கொண்டுள்ள ஈழத் தமிழினம் ஒற்றுமைகெட்டு, உள்மோதல் மலிந்து, தன்னை அழிக்கிறது.

இவ்வாறு சுயநலவெறிகள் காரணமாகவே நொந்துகொண்டிருக்கும் நம்மினம், அச்சுயநல உந்தல் துணைகொண்டே மீட்சிகண்டு உய்யவும் ஓர் உபாயம் உண்டு. அதாவது சமூக இனவுணர்ச்சி பெறுவதன் மூலம் விடிவுகாணத் தெரியாத தமிழர்நாம், தனித்தனியே நம் மை நாமே காப்பாற்றிக் கொள்ள ஒருமனமாகத் திரிகரண சுத்தி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு கடவுளையே நம்பி வழிபடுவதன் மூலம், தனிமனிதர்களின் கூட்ட மைப்பான தமிழினத்தின் விடுதலையையும் உருவாக்கிட முடியும்.

எனவே தனித்தும் , அதன்மூலம் சமூக ரீதியாகவும் விடுதலை பெறுவதற்காக இறைவனுக்கு எம்மைச் சரணாகதியாக்கி, அறச் செயல்களிலும், அறவழிப் போராட்டங்களிலும், வாய்க்கும் கணந்தோறும் ஞான நூல்களைக் கற்பதிலும், கேட்பதிலும் ஈடுபடுவதே இன்றுள்ள ஒரே யொரு மீட்சி மார்க்கமாகும். அந்த வழியில் உதவும் எனது முயற்சியின் விளைவாகவே இந்நூல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவருகின்றது.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

கனடா அன்பன் ச.வே.பஞ்சாட்சரம்

சித்திரை-2018

## பண்தர் பஞ்சாட்சரம் பக்தி இலக்கிய நூல்கள்

1-இணுவில் செகராசப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ் - 2ஆம் பதிப்பு
2-இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் (2ஆம் பதிப்பு)
3-முக்கோட்டத் துதி
4-அன்னைநாச்சி அருள்மஞ்சரி
5-அன்னை அருளமுதம்
 1-நுணாவிற்குளம் கண்ணகி அம்மன் நான்மணிமாலை
 2-இரணைமடு கனகாம்பிகை அம்மன் நான்மணிமாலை
6-சுன்னை ஐயனார் அம்புலித்தூது
7-கைதடி நுணாவில் சிவபூதநாயர் பதிகம்
8-கிளிநொச்சி கந்தபுரம் முருகன் திருப்பள்ளி எழுச்சி
9-கிளிநொச்சி இத்தியடி முத்துமாரி அம்மன் திருப்பள்ளி எழுச்சி
10-மல்லாவி யோகபுரநாதர் திருப்பள்ளி எழுச்சி
11-கிளிநொச்சி கந்தபுரம் முருகன் மும்மணிக் கோவை
12-மன்னார் பாலம்பிட்டி முத்துமாரி அம்மன் மும்மணிக் கோவை
13-இணுவில் விளாத்தியடி ஞானவைரவர் திருவிரட்டை மணி-மாலை
14-வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் திருவிரட்டை மணிமாலை
15-கந்தபுரம் கண்ணனுக்குத் தூது
16-கந்தபுரம் கண்ணபிரான் திருவூஞ்சல்
17-கந்தபுரம் கரும்புத்தோட்ட விநாயகர் திருவூஞ்சல்
18-கந்தபுரம் ஸ்ரீநாகதம்பிரான் திருவூஞ்சல்
19-கந்தபுரம் இத்தியடி முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்
20-கந்தபுரம் காட்டம்மன் முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்
21-கந்தபுரம் 2ஆம்திட்டம் பாடசாலைத் துர்க்கை அம்மன் திருவூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-பலாலி மனோன்மணி அம்மன் திருவூஞ்சல்
23-உடுவில் புளியடி ஞானவைரவர் திருவூஞ்சல்
24-முழங்காவில் முருகன் திருவூஞ்சல்
25-வன்னேரி ஐயனார் திருவூஞ்சல்
26-பரந்தன் பொறிக்கடவைக் கண்ணகை அம்மன் தலபுராணம் 2ஆம் பதிப்பு
27-கிளிநொச்சி ஆனந்தபுரம் துர்க்கை அம்மன் துதி
28-அக்கராயன் ஆரோக்கியபுரம் சித்திவிநாயகர் திருவடி புகற்பா
29-உடுப்பிட்டி மனோன்மணி அந்தாதி
30-மல்லாவி யோகபுரநாதர் சேவடிச்சிந்து
31-வன்னேரி ஐயனார் அருள்மங்கலம்
32-கந்தபுரம் காட்டம்மன் சிந்து
33-கந்தரோடை வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல்
34-தொண்டைமானாறு செல்வச்சந்நிதி வெண்பா
35-வேலணை ஸ்ரீகாளியம்மன் திருப்பள்ளியெழுச்சி
36-சுன்னாகம் சொர்ண பத்திரகாளி அம்மன் திருவூஞ்சல்
37-கனடா துர்க்கேஸ்வரம் துர்க்கை வெண்பா
38-கனடா துர்க்கேஸ்பரம் தலபுராணம்
39-உரும்பராய் மகாமாரி அம்மன் திருவூஞ்சல்
40-இலண்டன் ஈழபதீஸ்வரர் திருவூஞ்சல்
41-நயினை நாகபூசணி அம்மன் நான்மணிமாலை
42-உடுவில் வடக்கு துர்க்கை அம்மன் திருவூஞ்சல்
43-உடுவில் வடக்கு ஸ்ரீ காளி அம்பாள் திருவூஞ்சல்
44-அச்சுவேலி வடக்கு ஸ்ரீ சுப்பிரமணியர் திருவூஞ்சல்
45-வண்ணை கடையிற்சுவாமி சிவன் திருவூஞ்சல்
46-கனடா மக்னிக்கல் செலலப்பிள்ளையார் திருவூஞ்சல்
47-கனடா மேருபுரம் பத்திரகாளி திருவூஞ்சல்
48-கனடா மேருபுரம் ஞானவைரவர் திருவூஞ்சல்
49-கனடா மேருபுரம் விநாயகர் திருவூஞ்சல்
50- கனடா மேருபுரம் முருகன் திருவூஞ்சல்
51-தெல்லிப்பளை துர்க்கை அம்மன் திருவிரட்டை மணிமாலை
52-கண்ணன் கவசம் (2ஆம் பதிப்பு, ஒலிப்பேழையுடன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் சரவணபவகுக

# கணபதி காப்பு!

ஊறுபத்தி ஒருநெஞ்சால்
உனையேத்தி நின்றேனை,
வீறுபத்திப் பன்னெஞ்சால்
மிகுந்தேத்த வைத்தவனே!
புத்தம் புதிதான
புகழ்வடிவ இலக்கியமாய்ச்
சித்தி விநாயகனுன்
திருவருளைப் பாடுகின்ற
சித்தம் கருக்கொண்டு,
தினம்நின் கழலேத்தி,
நத்தித் திரிந்தஅந்த
நாட்களிலே ஓரிரவு!
கந்தன்இளந் தொண்டர்மடம்!
கனவில்நான் இருக்கின்றேன்!
வந்தென்முன் நீநிற்க
வணங்கிவிழுந் தேத்துகிறேன்
"பத்திகமழ் பசும்பிள்ளைத்
தமிழொன்றே பாடென்மேல்"
உத்தரவு போட்டங்கே
ஒருநொடியில் மறைகின்றாய்!
பொங்கியெழும் பூரிப்பில்
புல்லரிக்க மேனியெலாம்,
கங்கையெழக் கண்ணில்நீர்
களித்துவிழுந் துருள்கின்றேன்!
இங்கினுவைப் பொங்கமிழ்தாய்
எழுந்தமுதற் கோன்உன்னைத்
தங்கநிகர் பாட்டுகளில்
தமிழ்செய்யத் தக்கவலு
தந்தருள வேண்டும்! உன்
சப்பைக்கால், கழலிணைகள்
வந்தருள வேண்டும் என்
வன்மனமாஞ் சிறுகுகையில்!

-ச.வே.பஞ்சாட்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1-காப்புப் பருவம்



## சிவன் காக்க

காணபத்தியக் களிநெறிக்கிறை
ஆணவப்பிணி அப்பழுக்குகொல்
மாணி ஐங்கர வண்கு ழந்தையை,
ஊணு றக்கம்அற் றுயிர்க ளுக்கருள்
ஆணெறிக்கென அமைந்த அங்குச
பாணி, பரவிடும் இணுவை யர்குடி
பேணு பிள்ளையை, பிஞ்சினை, அரா
பூணும் எம்சிவன் காக்க காக்கவே!

## பார்வதி காக்க

பிரணவத்துதி பிள்ளை யாரினை,
சரவ ணஞ்சுடர் சண்முகத்தனை,
வரவ ழைத்த,இம் மண்டலத்தையே
புரந்த ருள்புரி புனித பார்வதீ!
கரிமுகத்தவன், கருணை மிக்கவன்
உருவு மங்களன் , ஒளிருங் கீர்த்தியன்
கரக தொப்பையன், கணங்க ளீசனை
உருகி நின்றுடன் உவந்து காக்கவே!

## கங்காதேவி காக்க

அங்கை யாற்சிவன் அன்று தன்சடை
தங்கு மாறுவை தண்புனல் புரள்
கங்கை அம்மையே! கைலையம்பொழில்
அங்கு ரித்ததோர் அங்க னிக்குவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்க ரத்தனை , அறிவும், இன்பமும்
இங்கெமக் கிசைந் தினிது நல்கிடத்
தங்கு மிணுவையன் தன்னைக் காக்கவே!
மங்கலத்தனை மகிழ்ந்து காக்கவே!

## கந்தன் காக்க

தம்பி உள்ளவன் சண்டை அஞ்சிடான்!
கொம்பு மின்னிடக் கூனி நீள்குழை
தும்பிநால்கரம் தொங்கும் அண்ணனை,
கம்ப மாமுகக் களிற்று வள்ளல், ஏ
ரம்பன், அப்பமோ டவல் விரும்பியை
நம்பு தேவரின் நலிவு நீக்குவேல்
நம்பி! கந்த! நீ நாளுங் காக்கவே!
எம்ப ருத்தியான் தன்னைக் காக்கவே!

## திருமால் காக்க

மட்டுண் வண்சிறை வண்டு பம்பிடும்
கொட்டு மும்மதம் கொம்பு பொங்கிடும்
குட்டி யானையை, கொண்ட சங்குடை
வட்ட நேமியான், வையங் காவலன்
விட்டுணு, கருங் கொண்டல் மேனியன்
பட்டிடும் பழஞ் சாபப் பாம்புரு
கெட்டு மீண்டிடக் கிளர்ந்து காக்கவே!
தொட்டில் ஐங்கரற் சூழ்ந்து காக்கவே!

## பிரமதேவன் காக்க

பெருகிடல்பிழை பிரபஞ்சம் எலாம்
தருப டைப்பினில் தவிரல் வேண்டியே,
பிரணவப் பொருள் பெறலும் வேண்டியே
கருது, கைதொழு கரங்கள் ஐந்தனை
பிரம தேவனே! பிள்ளை யாரிவர்
வருயுகக்கலி மம்மர் தீர்ந்திட
அருளும் அந்நிலை அடையும் மட்டுமே
குருவி, கொக்கிடைக் கூர்ந்து காக்கவே!

## வயிரவர் காக்க

கயிலை யங்கிரிக் கண்ணுதல்தரப்
புயல் எனப்புகுந் தயன்புலத் திமிர்
இயல்பொ டுங்கிட இடர்பு ரிந்தவா
வயிரவா! செக ராச மன்னவன்
தயவு தண்ணளி சந்ததம் செய
இயைய நாட்டிய இணுவை இன்தளிக்
கயமு கத்தருட் கைக்கு ழந்தையை
நயமுறும் வகை நண்ணிக் காக்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரர் காக்க

வீர பத்திரா வீம்பி னுக்கெனத்
தீர வேள்விசெய் தீயன் தக்கனைக்
கோரமாய்க் கொலை செய்த கண்ணுதல்
வீர மைந்தனே! வித்தை ஞானியை,
ஈர நெஞ்சினோ டிணுவை வந்துறை
ஆர ணத்தனாம் அரிய பிள்ளையை,
வார ணத்திளங் கன்று வள்ளலை,
நார ணற்கினி நறையை ஓம்பவே!

## இந்திரன் காக்க

உலகு யாவையும் ஒருங்க லைத்திடும்
கலக வல்லபக் கஜமு கன்தனை
எலிய தாக்கியே ஏறும் பாகனை,
குலவு கூருருப் பிரண வங்களில்
அலைசெ விக்குழ வைங்க ரத்தனாய்
மலரும் ஈசனை வானவர்க்கெலாம்
தலைவன் இந்திரன் சார்ந்து காக்கவே!
கலியுகந்தொழக் கண்டு காக்கவே!

## அகத்தியன் காக்க

ஆதி அந்தமிழ்க் கடிஇ லக்கணம்
ஓதி வைத்தநம் ஒள்ள கத்தியன்
மேதை, வில்வலன், வாதா பியிணை
வாதை யுற்றழி வித்த மாதவன்
வாதா பிநின்று வந்தெம் மூர்வரை
சோதி வானுருச் சுடர்கொ ளுத்திடும்
வேத நாயகன் விண்ண வர்கண
நாத வள்ளலை நயந்து காக்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-செங்கீரைப் பருவம்

அடியாட் கள்தம் படைகொண்ட
ஆண்டவன் மார்செய் இடர்கொன்றுன்
அடியார் கூட்டங் காத்திடவே
அங்குச பாசம் ஏந்தியவா!
நெடுமால் பாம்புச் சாபவுரு
நீங்கி ஆலங் காட்டினிலே
படையல் பூசை தரஏற்றோய்
படியோர் பாவம் கார்த்திகையில்
அடையும் சட்டியிற் பூசைசெயின்
அறுத்தின் பருளக் கேட்டவரம்
கொடையீந் தோனே! செகராசக்
கோன்செய் கோவில் அமர்ந்தவனே!
கடமார் களிற்றுக் கணபதியே!
களிப்போ டாடாய் செங்கீரை!
அடிமை ஆக்கி எமக்கெதுவும்
அளிப்போய் ஆடாய் செங்கீரை!

பறக்குங் காவடி, துள்ளாட்டம்
பல்குங் காவடி, பாலமுதம்
நிறைக்குங் காவடி, பிரதட்டை
நிகழ்த்தும் காவடி, தணல்பொங்கும்
தெறுந்தீ மிதிப்பு முதல்பத்தி
சிறக்கும் வைராக் கியர்ஏத்தும்
கறந்த பால்வெண் தந்தமுகா!
கையால் தம்தலை தமில்குட்ட
மறந்துன் தலையிற் குட்டவரும்
மண்,பெண், பொன்னில் குலைந்தவர்கள்
திறம்காண் செகரா சக்குருவே!
சிறுதளி இணுவை மாமன்னா!
முறம்பயில் செவிகள் மொய்த்தலைய
முக்கண ஆடாய் செங்கீரை!
வறங்கெட மாரி வான்பொழிய
மகிழ்ந்தெழுந் தாடாய் செங்கீரை!

ஒவ்வோர் மனிதனும் பிறவிகளும்
ஒவ்வோர் சோக காவியமே!
எவ்வெவ் விதமாஞ் சோதனைகள்!
எவ்வெவ் விதமாந் தண்டனைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வா மலங்கள் மூன்றினையும்
ஒடுக்கக் கோடி அடியுதைகள்!
அவ்வை தமக்கு முத்தமிழை
அருளிக் கவிகள் பெற்றவனே!
வவ்வுங் கள்ளம் வரங்கேட்கும்
மடமை தீண்டாத் தெளிவுடனே
செவ்வி தான நேர்வழியில்
செல்வந் தேடும் வழிகேட்கும்
அவ்வூக் கத்தார் அண்டிணுவை
அரசே! ஆடாய் செங்கீரை!
எவ்வேழ் பிறப்பில் வருநோய்க்கும்
இன்மருந் தாடாய் செங்கீரை!

பொய்ம்மா மாலப் பத்தியினால்
புவியை மருட்டிப் புன்னெறியிட்
டுய்ம்மா றழிக்கும் உளஞ்சிறவார்
ஊழல் அணுகா நல்லிணுவைக்
கைம்மா வேந்தே! கைநான்கும்
களிக்கும் மஞ்சம் தனிலூன்றி
நெய்ம்மா விளக்கும், மோதகமும்
நெருங்க ஆடாய் செங்கீரை!
மெய்ம்மா தவஞ்செய் பரிசுத்தம்
விழியும் நெஞ்சுன் அடியர்க்குச்
செய்ம்மா தவனே வாதாபித்
திருநா டொருவிப் பரஞ்சோதி
வைம்மாண் காஞ்சி புரத்தமர்ந்த
வள்ளல் ஆடாய் செங்கீரை!
கைம்மா றெண்ணாக் கருணைமழைக்
கணமே ஆடாய் செங்கீரை!

தாலிகள் ஏறி இன்பங்கள்
தழைஇல் லறஞ்சேர் மணங்கோடி
காலமெலாம் உன் மண்டபத்தில்
கண்டருள் மகிழ்ந்தீ கணபதியே!
சோலிகள் தந்தெம் துணிவோட்டச்
சூழ்ச்சிகள் செய்து களைத்தவரெம்
காலினை வாரித் தாம்வீழக்
காட்டி நகைக்குங் கண்ணுதலே!
காலனைச் செல்வர் பிரபுகளாய்க்
காலிரண் டீந்து விட்டுலகில்,
வாலினை ஒட்ட நறுக்கிவிடும்
மகிழ்விளை யாட்டுப் புரிபவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலொடு தேனாய் அள்ளூறப்
        பாலக ஆடாய் செங்கீரை!
மூலவ வேத முழுமுதலே
        முத்தனே ஆடாய் செங்கீரை!

கற்றோர் காட்டும் வழிகாசு
        கடமை புரிந்தால் ஊரெல்லாம்
வற்றா இன்ப வளம்பல்கும்!
        வழமை இதனைப் புறந்தள்ளி
முற்றும் மாறாய் மூதறிஞர்
        மூடச் செல்வர் பின்சென்றே
அற்றார் மகிமை! புற்றீசல்
        ஆய்ப்பொங் கிகழ்ச்சி தாங்காமல்
ஒற்றைக் கொம்பா உத்தமனே
        ஒளித்தார் வீட்டு மூலைகளுள்!
அற்றை அசுரன் கசமுகனை
        அழிக்கப் பிரண வத்தினிலே
கற்றைச் சுடராய் உதித்தவனே!
        கண்கள் நெஞ்சு குளிர்ந்திடவே
முற்றல் நிலவாம் முகம்தூக்கி
        முழந்தாள் ஆடாய் செங்கீரை!

வலுத்த ஆங்கிலர் ஆட்சியிலே
        வண்டமிழ் சைவம் தமைக்காத்துத்
துலக்கத் திண்ணைப் பள்ளிஉன்றன்
        சூழலில் நடத்தி இணுவைக்கு
நிலைத்த புகழை ஈந்தஅருள்
        நெஞ்சா! ஆடுக செங்கீரை!
உலக்கை கொண்டு கஜமுகனை
        ஒடுங்க வலிமை அடித்தவனே!
விலக்கி உலகப் பற்றென்னை
        மேன்மை உணர்வில் உய்த்தவனே!
நிலைக்கச் சாத்து விகக்குணமே
        நிமிடந் தொறுமென் நெஞ்செல்லாம்,
நிலத்தில் அமர்ந்துன் நினைவூறும்
        நிலவுக் குளிர்ச்சி மாந்தவைத்துக்
கலைக்குள் இன்பக் கலையாகக்
        கஜனே ஆடுக செங்கீரை!

நிறைமதி நாளில் சித்திரையில்
        நீராட் டமைபெரு விழாக்களிலே
அறிஞர் சற்பிர சங்கங்கள்,
        அன்னம், தண்ணீர்க் கொடைகள்,சப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறமூர் பவனி, தேர்ப்பவனி,
பண்ணிசை நாக சுரம்,தவில்கள்,
நறும்புகை வாசம் நுகரிணுவை
நாதனே ஆடுக செங்கீரை!
சிறுமைகள் நீங்கித் தமிழருன்காற்
திரண்டிட ஆடுக செங்கீரை!
சிறுவர் வெள்ளை உள்ளங்கள்
சின்னக் கைகள் தொண்டினிலே
நிறைவுற் றருளுந் தாய்நெஞ்சே!
நிமலா ஆடுக செங்கீரை!
குறைகள் தீர்த்தென் நெஞ்சத்தைக்
குழைத்தாய் ஆடுக செங்கீரை!

"ஊசிக் காதுள் ஒட்டகங்கள்
ஒருகால் நுழைதல் கூடிடினும்
காசுக் காரன் கடவுளடி
காணல் தப்பியும் நடவாது"
ஏசுப் பெரியன் இயம்பியதாம்
இந்தக் கூற்றை மெய்ப்பிக்கும்
நாசச் செல்வர் நடையின்று
நமக்குள் ளேயும்! இந்தஅமா
வாசை நெஞ்சர் நிழலும்படா
மண்ணும் விண்ணும் தொழுங்கோவில்
வாச! கணப தீச்சரத்தில்
வைத்தாய் தந்தை கோவில்!செக
ராசன் தொட்ட அருட்புனலே
எழுந்திங் காடாய் செங்கீரை!
வாசப் பூக்கள் மண்டடியின்
மன்னா! ஆடுக செங்கீரை!

உன்னை ஆண்டா னாய்ப்பெற்ற
உண்மை அடிமைக் கழிவுண்டோ?
உன்னை ஆண்டா னாய்ப்பெற்ற
உண்மை அடிமைக் கிழிவுண்டோ?
என்னை அழிக்கத் திரண்டவரே
இழிந்தார், இழந்தார், அழிந்தார்கள்!
இன்னும் இன்னும் உன்காலே
இறுகப் பற்றி நின்றிடுவேன்!
பொன்னைத் தொழுதே உனைத்தொழுவோர்
போலிப்பத்தி தனை எள்ளும்
முன்னைப் பழையா கார்யானை
முகத்தாய்! ஆடாய் செங்கீரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைத் தமிழிங் கரியணையில்
அமர்ந்திட ஆடாய் செங்கீரை!
தென்னங் காய்கள் சிதறுமொலித்
திகழ்பவ ஆடாய் செங்கீரை!

## 3-தாலாட்டுப் பருவம்

தங்கத் தொட்டில்,
தண்டா மரைச் சேக்கைப்
பொங்கும் நறும்பல்
பூவின் பனியிதழ்கள்,
நுங்கின் குளிர்ச்சி
நோகா விதம்தாங்குன்
அங்கம் அனைத்தும்
அந்தண் நிலாக்கதிரோ?
கொங்கும் தண்கதிரும்
குழைந்து திரள்வடிவோ?
சங்குத் தொடையோ?
தந்தம் சமைசிலையோ?
எங்கும் சுற்றி
ஏத்தும் இமையவர்தம்
துங்கா! இணுவைத்
தொல்தவமே! தாலேலோ!

கனவில் வருவாய்!என்
கற்கண்டுப் பாடற்
புனைவில் வருவாய்!
அறங்காக்கும் போர்இன்ப
முனைவில் வருவாய்!
முழுவேளை ஏத்தும்என்
நினைவில் வருவாய்!
நிமலா! நிறைஞானப்
பனுவல் பயில்வாய்!
நிலவாய்க் குளிர்ந்திணுவைச்
சுனையில் பூத்த
சுடரே! சிவன்,தேவர்
முனிவர், அண்டர்
முதல்யாவ ருங்கண்கள்
கனிய உனையாட்டக்
கண்வளராய் தாலேலோ!

துண்டப் பிறைகள்
சுடரும் திருத்தந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டெங் குடிகள்
　　காப்போனே! சக்தியுனைப்
பண்டோர் அசுரன்
　　பண்டா சுரன்தன்னை
மண்டமரில் வெல்ல
　　வழிபட்ட நற்புகழ்போல்
அண்டுங் கீர்த்தி
　　ஆயிரமாய்க் கொண்டவனே!
வண்டு விழிகள்
　　மயங்கும் அறிதுயிலில்
கண்டெம் பக்தி
　　களிப்பவனே தாலேலோ!
அண்டம் தமக்கெல்லாம்
　　ஆதியனே தாலேலோ!

நம்பாவ நெஞ்சுள்
　　நரி,நாய்கள்! மத்தியிலும்
வெம்பாவம் தீர்த்து
　　விடிவீய நிற்பவனே!
நம்பன் மகனே!
　　நாதப் பிரணவனே!
இம்பர் வாழ்வில்
　　எழில்கள் சுகபோகம்
உம்பர் வாழ்வில்
　　ஒப்பில்லா வீட்டின்பம்
நம்பித் தொழுவோர்,
　　நண்ண அருளும்,ஏ
ரம்பா! எழிலா!
　　எலிவா கனத்தோனே!
கொம்பொன் றொடித்த
　　குஞ்சரமே, தாலேலோ!

சீல மரநிழலின்
　　தெய்வீகம் உணராத
ஆலயம்தம் உற்பத்தி
　　அந்நிழலென் றறியாத
பாலை செயும் தீயர்
　　பரிவணுகா மேன்மையினால்
சோலைவனம் வாழுஞ்
　　சுகமார் கணபதியே
காலை, பகல், மாலை
　　கங்குல் தொறும் உன்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலில் அமர்ந்தின்புண்
        காதல் கனிவிக்கும்
நாலும் எழில்வாயா
        நல்லமுதே! தாலேலோ!
பாலினிலே ஆடும்
        பண்ணவனே! தாலேலோ!

பால்விலை பகுபார்ப்போர்
        பன்னூற்றுக் கொருவர்தான்!
தோல்விலை பார்ப்போர்
        தொகையே மிக! அதனால்
சால்புடைய எல்லாம்
        சக்கை விலைக்கழியத்
தோல்வியுறும் நல்ல
        தொண்டெல்லாம் இன்றுலகில்
நூல்கள் பொதிசெய்ய
        நூறுகிறாம் சதம்ஐந்து!
நால்வேதத் தார்கூட
        நரர்பூ சகரானார்!
சேல்,புலி,வில் சின்னச்
        செந்தமிழின் செகராசன்
கால்கொள் தளிவாழுங்
        கற்கண்டே தாலேலோ!

மூன்று புரமெரிக்க
        முக்கண்ணன் போங்காலை
ஆன்ற மகனாம்உன்
        அருள்பெற்றான் என்பார்கள்!
ஊன்றி உனையெண்ணும்
        உத்தமர்நெஞ் செல்லாமே
தோன்றி இனிமைபல
        தூண்டச் செகராசக்
கோன்தன் கோவில்
        குடிகொண் டமர்கின்றோய்!
ஈன்றாள் பிரணவம்
        என்னும் பிடியானை
போன்றாள் உமையாள்
        பூந்தொட்டில் ஆட்டஎழும்
தேன்பாய் இசையில்
        சிலிர்த்துறங்கு தாலேலோ!

பொன்செல்வம் பூத்தார்
        போடும் எலும்புக்காய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்செல்லும் பேதைப்
பாமரர்கள் இன்பஞ்செய்
உன்சொல்லைத் தட்டி
உலுத்தர் வழிசென்று
துன்பங்கள் ஏற்பார்!
தொடரா திவர்போக்கை,
இன்சொல்லால் ஏத்தி
என்றன் அரும்புதல்வர்
உன்பக்தி மூழ்கி,
உன்சொல் வழிச்செல்லும்
நன்னம்பிக் கைநீ
நல்க வரம்கேட்டேன்!
அன்பர்க் கினியா!
அள்ளமுதே தாலேலோ!

நஞ்சுண்ட பண்டம்
நக்குபசு வுஞ்சாகும்!
நஞ்சர்தம் சார்பால்
நல்லோர்க்கு மேநாசம்!
வஞ்சப் பணம்செல்
மனையெல்லாம் துன்பஎரி!
நெஞ்சந் தெளிய
நீணிலத் தார்க்குணர்த்து
பஞ்சக் கரவா
பழம்தொல் பதியிணுவை
மிஞ்சும் அருளே!
மேவுன் அடியார்க்குக்
கஞ்சிக் கில்லாக்
காலத்தும் கள்ளவழி
அஞ்சும் புனிதம்
அருள்பவனே! தாலேலோ!

எனைஅச் சுறுத்த
ஏவிப் படைவிட்டோர்
வினையின் பயனை
விரைவில் படவைத்தாய்!
உனைநம்பி நிற்போர்
உயிர்க்குப் பெருங்காப்பே!
கனைகார்ப் பொழிவுள்
காக்கும் பெருநோன்பில்
நினையும் வரங்கள்
நிறையஅருள் கற்பகமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைமா விளக்கின்
செம்மை நுகர்வோனே!
தனியோர் மரம்நீ
தருவோய் பலதோப்பு!
வினைகொல் சுடரே!
வேழமுகா தாலேலோ!

## 4-சப்பாணிப் பருவம்

குட்டக் குட்ட ஆசைக் குலங்கள்
குனிந்து மூப்புவரை,
பட்டுங் கெட்டும் பண்புற் றோங்காப்
"பாவப் புவிவாழ்வை
விட்டு வெறு"என் றான்மா சொலினும்
வீரம் மனத்தில்லை!
மட்டுண் வண்டார் மலர்கள் வனஞ்சூழ்
வண்ணச் சிறுகோவில்
கட்டுண் டுறையும் கருணைக் கடலே
கலைகள் மலியிணுவைத்
தொட்டில் நிலவே! தொழுங்கால் தண்ணீர்
சோற்றை முதல்வேண்டேன்!
கட்டப் பஞ்சப் புலன்கள் வலுசேர்
கருணை வரங்கேட்பேன்!
கொட்டுன் கைகள்! கொன்றென் பழிகள்
கொட்டுக சப்பாணி!

'பித்தன்' 'பேயன்' ஏச்சுப் பெற்றும்
பீடை தீர்த்தருள்செய்
அத்தன் மைந்த, அண்ணல் கரியே!
அடியேன் உயிர்வேண்டல்
சுத்தம்! இன்னுஞ் சுத்தம்! ஆன்மா
சுடரும் பெருஞ்சுத்தம்!
பித்தம் தெளியச் சித்தம் தெளியப்
பிள்ளைத் தமிழ்பாட
வைத்த கருணை வண்ணம் மறவேன்!
மனதில் வசந்தஞ்செய்
வித்தை புரிவாய்! வேகம் தீர்ப்பாய்
வெறுத்தேன் புகழ்என்றோ!
கொத்துக் கொத்தாய்க் கொட்டிய முத்தே!
கொட்டுக சப்பாணி!
கொத்துக் கொத்தாய்க் குவிபூங் குன்றே
கொட்டுக சப்பாணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முப்படை தங்கள் மூப்பினில் செய்த
மோசம்" எனநழுவித்
தப்பிட எண்ணுந் தரைஅர சர்போல்
சறுக்கிட மாட்டாய் நீ!
அப்படை உன்றன் அங்குச பாசம்
அழித்திடப் பழிமூடை,
அப்பன்நீ என்னை ஆண்டிட வேண்டும்!
அருளிணு வைவேந்தே!
கொப்புநீ புளியங் கொப்பென நல்லோர்
குவிந்துன் கால்பற்ற
வைப்பவ எனையும் மலம்நலி வித்து
வானிடம் தரவேண்டும்!
சப்பையங் கால்கள் சப்பணங் கொட்டித்
தட்டுக சப்பாணி!
குப்பையின் நடுநான் குன்றியென் றோங்கக்
கொட்டுக சப்பாணி!

நோய்களின் கையில் நொந்தஎன் காலம்
நூறுபல் லாயிரம் நாள்!
வாய்கிழி நூறு வாதுகள் இட்டு
மறைந்தன ஆயிரம் நாள்
பேய்மன ஆசை, பித்துக ளாலே
பிழைபட்ட ஆயிரம் நாள்!
ஓய்வற ஊணுக் குழைத்தழிகாலம்
உறுபல ஆயிரம் நாள்!
காய்வுறும் உயிர்க்குக் கனிவளம் கூட்டக்
கால்கதி என்றடைந்தேன்!
காய்சின அசுரன் கஜமுகன் அடக்கிக்
கனிந்திமை யோர்க்கருளீ!
தாய்மன இணுவைத் தண்ணளி ஈசா
தட்டுக சப்பாணி!
நோய்மலம் தீர்த்தென் நோபவம் போக்க
நுனித்தடி சப்பாணி!

பெருமழை காற்றுப் பேயிடி மின்னல்
பிய்த்திட இரவுபகல்
அரசடி தோறும் அமர்ந்தடி யார்க்கோ
அரண்மனை அருஞ்சுகங்கள்
வரமருள் எளியோய்! வறியஇல் தன்னில்
மகிழ்ந்திணு வையுறையும்
கரிமுக அண்ணால்! கவின்மனை தோறும்
கனிந்துனை முதலிருத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுங் கொண்டாய்! பிள்ளையங் குருவே!
பேதையெற் கிரங்கியிடர்
தருமலம் நீக்கித் தண்ணளி சேர்த்துச்
சஞ்சலம் தீர்த்தருளி,
வருதுயர்ப் பிறவி வளர்கதை முற்றி,
மகிழ்ந்தொலி சப்பாணி!
இருகரந் தூக்கி இன்னொலி கூட்டி
இசைந்தொலி சப்பாணி!

அண்டர்கள் பூத அருங்கணத் தவர்கள்,
அரன்,உமை, அரி, அயனோ
டண்டிய சித்தர், அனையவிஞ் சையர்கள்
அருந்தவ ரிசி,முனிவர்,
தொண்டர்கள் சூழுஞ் சுடர்ச்சிறு கோவில்
சுகித்துறை வேழமுகா!
பண்டையுன் சாபப் பங்கமுண் நிலவும்
பலதொலை தூரம் நின்றும்
தண்டனை நீக்கம் தரவரம் கேட்கும்
சால்புறுங் கணபதியே!
மண்டிய பாவ மலைபிடி மண்ணாய்
மாய்ந்திட எமக்கருளி,
முண்டக மலரின் முத்தொளிர் கைகள்
மோதுக சப்பாணி!
வண்டிசை பாடும் மதகரி ரூபா
மகிழ்ந்தொலி சப்பாணி!

"அடிதொழ இந்திய ஆசிர மங்களும்
அருள்சண் முகஞ்சாமி,
தொடர்அவர் சீடர் தம்பிமுத் துவெனும்
சுவாமி, என்தளிமுன்
குடிலுறை கணபதிப் பிள்ளைச் சுவாமிபோல்
கூர்பத்திப் பெரியண்ணன்போல்
புடமிடு மின்நெஞ்சு! புனிதஇல் பலவாய்ப்
பொலிவித்து மனத்தளிகள்
இடம்பல நான்வாழ் இருப்பிடஞ் செய்மின்!"
எனும்உன துளமறிந்தேன்!
கடல்அருள் ஞானக் களிறுன கால்கள்
காசினி ஆளல்சொல்லிக்
கொடைமலி கையால் குங்கும மேனி
குழைந்தொலி சப்பாணி!
பொடிபடப் பாவம், பொலிவுற இன்பம்
போடுக சப்பாணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திர மாடு சுற்றிடு மாறு
சுந்தர அனுபவங்கள்
பூத்திட லின்றிப் போம்அவ நாளைப்
பொன்செயும் வகையினிலே,
ஊத்தையர், வேட உலுத்தர்கள் சூழ்ச்சி
உலுக்கிடப் பலவழியில்
காத்திர உண்மை கணக்கில தெளிவாய்க்
கண்டுயர்ந்தேன், காவி
நாத்திகர் மொட்டை நாடகத் துறவோர்
நஞ்சடி படுதலிலா
மூத்தஇவ் விணுவை முதல்தளி இறைவா!
மொய்ம்புறச் சாத்விகமே
மாத்திரைப் பொழுதும் மனமுறங் கேனே!
மகிழ்ந்தடி சப்பாணி!
கோத்துன கால்கள் குளிர்ந்தமர்ந் திங்கே
கொட்டுக சப்பாணி!

அடிமுடி தேடி அலைந்துலைந் தகந்தை
அடங்கிய அரி,அயன்கள்
அடிமைசெய் சிவனுக் கருமகிழ் மகனே!
ஆள்வெறிச் சுயநலத்தால்
அடிகொடி பார்த்தே ஆலயநீதி
அறைபவர் அணுகலிலா
நடுநிலை யாளர், நன்மனத் தொண்டர்
நண்ணிடும் பதியரசே!
கடிகமழ் கொன்றைக் கருங்குரங் கின்வாற்
காய்பல ஆடிணுவைக்
குடிலுறை குன்றக் குங்கும மே!நாள்
கொள்பவர் சாணி,மஞ்சள்
பொடியிலும் மண்ணின் பிடியிலுங் குந்தீ!
பூ,அறுகில் எழுவோய்!
படபட வென்றே பலதிசை அதிரப்
பயிலுக சப்பாணி!

மன்னன் தோட்டம் மருவி அமர்ந்தோய்!
மகிழ்ந்தொலி சப்பாணி!
தென்மொழித் தமிழின் தீஞ்சுவைப் பாட்டே!
திகழ்ந்தொலி சப்பாணி!
மின்மருங் கடியார் மிகவலம் வருவோய்!
விழைந்தொலி சப்பாணி!
பொன்பொலி கொன்றைப் பூம்பொழி லோனே
போடுக சப்பாணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்துடி காரின் மிகுமழை விரதம்
விண்டொலி சப்பாணி!
என்புரு கருளின் இளம்பிறைத் தந்தீ!
எழுப்புக சப்பாணி!
மன்செக ராசன் வாஞ்ஞையில் வந்தோய்
மலர்ந்தொலி சப்பாணி!
துன்பமொன் றில்லாச் சுகமயம் சேர்க்கச்
சுடர்ந்தடி சப்பாணி!

## 5-முத்தப்பருவம்

இமயத்தில் பார தத்தை
எழில்வல மருப்பி னாலே
அமைவுற எழுதி வைத்த
அண்ணலே! வளர்ப்போம் சைவ
சமயம் என்பவர் பிழைக்கும்
சந்தர்ப்பம் வளர்க்கும் இற்றை
எமனுல கத்தில் உன்றன்
இன்னருள் ஈட்டம் ஒன்றே
எமதுயிர் இலக்காய்க் கொண்டோம்!
இணுவையில் முதல்நாட் டுண்டு
கமழ்வுறுங் கோவில் ஆர்ந்த
கற்பகா! அண்டங் கோடி
சுமைமிகுஞ் சுடர் வயிற்றோய்!
தூயனே! அருள்வாய் முத்தம்!
இமைப்பறு நாட்டத் தேவர்
ஏத்தவே அருள்வாய் முத்தம்!

ஒருமுகத் தோடுங் கைகள்
ஒரைந்து கொண்டாய்! ஐந்து
திருமுகத் தோடும் பத்துத்
திருக்கரங் கொண்டாய்! பண்டைச்
செருமுகத் தொற்றைக் கொம்பால்
சிதைத்தவா அசுரன் தன்னை!
ஒருமுக மாக என்றன்
உளமுடல் வாக்குன் பாதம்
கருதிடும் இன்ப நாளைக்
கடிதினில் அருள்செய் வாயோ?
அரசனச் செகரா சன்தன்
அங்கையால் நிறுவப் பட்டுப்
பெருகருள் புரியுஞ் சின்னப்
பிள்ளையே! அருள்வாய் முத்தம்!
அருகமர் குடிகள் காக்கும்
அண்ணலே! அருள்வாய் முத்தம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்பொலிந் திலங்குங் கொன்றைப்
        பூமழைப் பொலிந்தி ருப்போய்
அன்பரின் உள்ளப் பூக்கள்
        ஆயிரம் அடிகள் மொய்ப்போய்!
என்பணி வெற்றி எய்த
        இன்னருள் என்றுஞ் செய்வோய்!
இன்சுவை மோத கங்கள்
        இடும்நெய்யில் வதங்கும் ஓசை
உன்திருக் கோவில் பொங்க
        உவப்பவா! நகர்த்தி ருச்சி
நன்மலை உச்சி நண்ணி
        நாடுல கோம்பும் ஈசா
என்மனம் நிறைக்கத் தாள்கள்
        ஈந்தவா அருள்வாய் முத்தம்
தென்றமிழ்ச் செகரா சன்தன்
        தெய்வமே! அருள்வாய் முத்தம்!

"வெப்பினாற் பூமரங்கள்
        வீந்தன! பூக்கள் இல்லை
அப்பெரு மான்பூ சைக்கெ"ன்
        றழுதஇந் திரன் களிக்க,
ஒப்பரு மகத்தி யன்தன்
        ஒண்கமண் டலம்ச ரித்தோய்!
இப்புவிக் கீந்தோய் அந்நாள்
        எழில்விரி காவி ரித்தேன்!
சப்பையங் காலா! வள்ளி
        தழுவிடக் குகனை வைத்தோய்!
முப்புரி நூல்மார் பையா!
        மூசிகந் தன்னில் ஊர்வோய்!
அப்பனே! இணுவை மூத்த
        ஐயனே! அருள்வாய் முத்தம்
கொப்புஉளம் ஆட்டும் ஆசைக்
        குரங்கிற அருள்வாய் முத்தம்!

தும்பிக்கை ஈசா! உன்றன்
        தும்பிக்கை மீதி லான
நம்பிக்கை ஒன்றே என்றன்
        நலந்தரு முதன்மைக் கையாம்!
வெம்பிக்கை கூப்பி உன்னை
        வேண்டிடும் துயரில் எல்லாம்,
சம்பு குமாரா வந்து
        சடுதியில் துன்பம் தீர்ப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பழி தீர்க்க நிற்போர்
தஞ்சமே! கைலா யத்தில்
நம்பனார் கோவில் முன்னால்
நண்ணுவோய்! அடியார் குட்டிக்
கும்பிடும் தோப்புக் கர்ணம்
கொள்பவா குழந்தைக் கோவே!
செம்பொன்னே! தாராய் முத்தம்
செக ராச தாராய் முத்தம்!

ஊர்நிகழ் பணிஒன் றிற்கும்
ஒருசதம் நல்கார், தொண்டு
யார்புரிந் தாலும் குற்றம்
ஆயிரம் பிடிப்பார்! தாமே
பேர்பெற மணிய மாகப்
பித்தலாட் டங்கள் செய்வார்!
வேர்வெட்டி ஆளுக் காளிம்
மேதைகள் புரியும் சண்டை,
மார்தட்டும் வீரம், உன்றன்
மலிசுவை அருளாம் தேனில்
ஓர்சொட்டும் சுவைக்கா மையால்!
உத்தமா கதிர்தீ திங்கள்
நேர்கண்கள் மூன்றாய்க் கொண்ட
நித்தனே, இணுவைத் தாயே!
கூர்கெட்டு மலங்கள் சாயக்
குஞ்சரா! அருள்வாய் முத்தம்!

வள்ளலுன் கழல்கள் ஏத்தி
மலடு,நோய் வறுமை தீர்ந்தோர்,
கள்,புலால் கொள்ளை சூது
கைவிட்டோர், சிறைகள் மீண்டோர்,
ஒள்ளிய பட்டங் கற்றோர்!
உன்னதக் கலைகள் தேர்ந்தோர்,
உள்ளிய மணத்தைப் பெற்றோர்
உயிர்காத்தோர் பன்னூ றன்றோ?
வெள்ளிய பருத்தித் தோட்டம்
விரும்பியன் றமர்ந்தூர் காக்கும்
தெள்ளிய தர்மக் கோவே!
திருமுறை கள்தொ குத்த
கள்ளமில் பக்தன் நம்பி
களித்திட அமுது கொண்ட
வள்ளலே! அருள்வாய் முத்தம்!
மழகளி றருள்வாய் முத்தம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி ஆற்றின் ஓரம்
        ஆம்பல இடங்கள் தோறும்
பரிவுடன் அமர்ந்தே பக்தர்
        பாலிள நீரி லாடிப்
பெருவளம் அருளும் ஞானப்
        பிள்ளையே அறுகம் புல்லைச்
சொருகிய சாணி தன்னில்
        தோன்றியும் அருள்செய் வோனே!
அருள்மொழி ஔவை வேண்ட
        அளித்தவா முதுமைக் கோலம்!
பிரம்மரூ பம்மேற் பாதி!
        பிறபாதி மனித ரூபம்
உருவமை வேழ வேந்தே!
        உமை,சிவன் கேள்வ ரங்கள்
அருளினாய் அருள்வாய் முத்தம்
        அங்குசா! அருள்வாய் முத்தம்!

சக்கரம் திருமா லுக்கு
        சால்வயி ரவற்குச் சூலம்
ஒக்கவே முருக னுக்கு
        ஓர்தனிச் சுடர்வேல் போல
விக்கினங் களையும் நிற்கோ
        வீசுபா சாங்கு சங்கள்!
துக்கங்கள், துயரஞ் சூழின்
        தொல்லைகள், பிணிகள் சேரின்
உக்குநீர் விழிகள் வேண்ட
        ஓடிவந் தெம்மைக் காப்பாய்!
சர்க்கரை பருப்புத் தேனில்
        சமைத்தமோ தகத்தில் மோக!
முக்கணா! ஏழை யேற்கும்
        முனைந்தருள் புரியாய் முத்தம்!
திக்கெலாம் வணங்கும் காப்பின்
        திண்ணியா! அருள்வாய் முத்தம்!

குலுங்கிடத் தொந்தி தொப்பை,
        குழைந்திடச் செவியி ரண்டும்,
இலங்கிடும் அணியங் கங்கள்
        எழில்பெறக் குலுங்கும் வண்ணம்
நலந்தரு நடனஞ் செய்தாய்!
        நகைத்தஅச் சந்தி ரற்கும்
கலங்கஅச் சதுர்த்திச் சாபம்
        கழறினை நமைவ ருத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலங்கெட இணுவை மண்ணில்
　　வந்தநால் வாயின் ஈசா!
விலங்குகள் கொடுமைக் கஞ்சி
　　வேற்றயல் ஊர்கள் தோறும்
புலம்பெயர்ந் துறையும் பக்தர்
　　புலன்தொறும் உறையும் ஐயா!
சிலந்திகள் வலையாய்ச் சூழ்ச்சி
　　சிதைத்தெமக் கருள்வாய் முத்தம்!

## 6-வருகைப்பருவம்

முத்தமிழில், முக்கனியில்
　　மும்முரங்கொள் பித்துடையாய்!
வித்தைகளில் வேலைகளில்
　　மேம்படுவோர் தொழும்இறைவா!
மத்தகமா மழகளிறே
　　வைத்தஉடன்றன் பெயர்கொண்ட
சித்துமிகு செகராச
　　சேகரன்மன் றங்களினால்
இத்தலை முறைகலையில்
　　எழுச்சிபெற வைத்தவனே!
பத்தர்தொழும் உன்னருளால்
　　படைப்புமுதல் ஐந்தொழிலும்
ஒத்தியல ஒண்கரங்கள்
　　ஓரைந்தாய்க் கொண்டவனே!
சத்தியத்தின் திருவுருவே!
　　சகங்களிக்க வாராயோ!

தீரம்மிகு துர்க்கை, வெறிச்
　　சினமகிடன் தனையழிக்க!
வீரபத்தி ரக்கடவுள்
　　வீழ்த்தவெறித் தக்கனினை!
சூரபன்மன் ஆட்சிகொல்லச்
　　சுடர்வேலன் எழில்முருகன்!
கூரகந்தை அயன்தலையைக்
　　கொய்தடக்க வயிரவனார்!
ஊரை,நகர் தம்மை,எரி
　　ஊட்டசுரர், அறநிழல்கள்
வேரைஎரிப் போர்தம்மை
　　வீழ்த்தஎவர்த் தருவாயோ?
ஈரம்அற்ற கஜமுகனை
　　இன்மருப்பால் ஒடுக்கவரு
வாரணமா முகத்தவனே!
　　மாண்குழவீ! வாராயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுமயில் கஞக்கிரங்க,
அடியாட்கள் தமக்கருள,
பழித்துணைநண் பர்க்கிரங்கப்
பந்தம்பிடிப் போர்க்கிரங்க,
குழிபறிப்பு, கொலை,கடத்தற்
குடிகெடுப்ப வர்க்கிரங்க
வளம்மிகுந்த பெரும்மனிதர்
மலியுமிந்த நாட்களிலே,
பழவினைகள் பயனொழிய
பழியகலும் வழிஅருள,
அழுபவருக் கிரங்கவென
ஐந்துகரன் நீஒருவன்!
எளிமைமனத் துறவிகளில்,
இனியஇசைத் தேன்மழையில்,
வழியும் அருள் அன்னையரில்
வாழ்பவனே வந்தருள்வாய்!

எத்தர்சிலர் எமன்பாசம்
எடுத்தணிந்து பூணூலாய்,
எத்தனையோ சண்டைகளை
எம்மினத்துள் மூட்டிடினும்
"மெத்தஉளர், என்போலும்
மெய்ம்மைதிகழ் அந்தணரும்!
உத்தமநல் லடியவரே!
உமைக்காப்போம்! அஞ்சேல்"என
நித்தமெமக் கருளுகின்ற
நிறைநிலவுத் தாய்நிழலே!
பத்திமிகும் பக்குவம்சால்
பணிவுமனப் பூசகரின்
சுத்தஅருட் பூசைபெறும்
துய்யவனே, வாராயோ!
முத்திநலம் நல்கிணுவை
மூலிகையே வாராயோ!

எடுத்தெறிந்தார் அந்நியர்கள்
எத்தனையோ உன்சிலைகள்!
இடித்தெறிந்தார் அந்நியர்கள்
எத்தனையோ உன்தளிகள்!
விடுத்தனையோ? அத்தனையும்
மீண்டெழும்ப வைத்தவனே!
எடுத்தெறிந்தார், இடித்தெறிந்தார்
இருந்தஇடம் தெரியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தின்னும் எத்தனையோ
அற்புதங்கள் இதுபோல
நடத்திடுவேன் என்பான்போல்
நகைபூத்து நம்மினுவை
இடுக்கணெலாம் தீர்த்தமர்ந்த
என்குருவே! வாராயோ?
ஒடுக்கமிலா ஓங்காரத்
துள்ளொளியே வாராயோ!

தாமேதான் இறைஎன்றே
சாதிப்போம் பலஎன்போர்,
தாமேபல் பிழைசெய்து
தம்கையால் தாமழிவர்!
நாமார்க்கும் குடியல்லோம்!
நல்லவைகள் சொலஅஞ்சோம்!
கோமான்,நம் செகராசன்
கோவிலிடங் கொண்டவனின்
தூமாக்கைத் துணைபெற்றோம்
தொண்டர்நாம்! எனப்பாடும்
பாமார்க்கப் பணிகாக்கும்
பண்ணவனே! போராடும்
நோமாற்றி விடிவீய
நுண்ணருளே! வாராயோ!
ஓமோங்கும் பெருமானே!
ஒண்கனியே வாராயோ!

தந்திரத்தை யேநம்பித்
தர்மம்,இறை மறந்தோமேல்
அந்தரமாய் அடியுண்போம்!
அதுதடுக்கும் வரம்கேட்க,
நொந்தழுதோம் நூறுமுறை
நுண்ணியன்உன் அடிகாண!
செந்தமிழாள் கோலோச்சத்
திகழ்சிங்கை தனிலாண்டான்
தந்ததளி மேலினுவைச்
சாமியென வந்தவனே!
தந்தமுகச் சுந்தரனே!
சார்ந்தழுவா னோர்க்கருள்செய்
திந்திமிதோம் திருநடனத்
திகழ்சப்பைக் காலழகா!
வந்தருள்வாய் மண்டபத்தில்!
வாழ்வருள வந்தருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியும் ஆறுதலும்
நிறைந்தஉருப் பார்த்தாலே
எம்மனங்கள் சஞ்சலஞ்செய்
இடரெல்லாம் போயகலும்!
அம்மாயன், கசலட்சுமி,
ஆடலிறை, வயிரவனார்,
அம்மன்தெட்ச ணாமூர்த்தி
அயிலன்மகா லட்சுமி,நாம்
நும்மிடம்கேட் கின்றவரம்
நுனித்தருள்சண் டேசுவரன்
இம்மகிபர் பரிவாரம்
இடையமரும் மூலவரே!
வெம்மாயக் கலியுகத்தில்
மெய்ஞ்ஞானம் உண்மைகளை
நம்மனையோர் நயந்தறிய
நண்ணியிங்கு வாராயோ!

ஒடுங்கியெலா முனைப்புகளும்
உளமார நிரந்தரமாய்
அடங்கியுன்றன் அடியிலமர்
அந்நெஞ்சின் துயர்துருவித்
தடங்கருணை யாற்போக்கித்
தருபவனே போக்கியங்கள்!
நடமாடுஞ் சுமைதாங்கி
நான்வந்துன் சரண்புக்க
அடிநாளில் எனக்குள்ளே
ஆகிவளர் இன்னமுதே!
தடுமாறி நான்வியந்து
தரிசிக்கத் தந்தவனே!
அடிநெஞ்சை அரித்ததுயர்
அருள்மருந்தால் தீர்த்தவனே!
நடம்போலும் அழகுநடை
நடந்திங்கே வாராயோ!

நுனித்தறிய நுனித்தறிய
நூறுசுகம் இன்பங்கள்
சனித்தெழும்பி ஆனந்தச்
சன்னதங்கள் தருகின்ற
கனித்தஅருட் கணபதியே!
காசினியில் உன்போல
இனித்தபொருள் கற்கண்டோ?
இன்கனிதேன் சர்க்கரையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனித்தசடைப் பரன்மைந்த
பைந்தமிழச் செகராசன்
சுனைத்தமனப் பத்தியினால்
தொட்டதளிச் செஞ்சுடரே!
வினைக்கடலாம் மேதினியர்
வெம்முகங்கள் விழித்தபழி
இனிப்புரியோம்! எழில்முகவா!
எமைப்பொறுத்து வாராயோ!

# 7-அம்புலிப் பருவம்

## (சாமம்)

எங்களினை இன்புறுத்தும் எங்களிறை இன்புறுத்த
இன்பநிலா அம்புலி வா!வா!
அங்குசபா சம்நமுவ, ஆயுதங்கள் அற்றவனாய்
அன்புடனே அழைக்கின்றான் வா!
இங்கெமிணு வில்உயிர்கள் ஏத்துதளி மண்டபத்தில்
ஏரபயக் கையசைத்தான் வா!
எங்களிறை நடமாட எள்ளியநீ நகையாட
இட்டபழஞ் சாபம் மறப்பான்!
பொங்குசிவன் காதலினைப் பொருந்துவதில் சமமானீர்
பொன்னிலவே ஆடிடவா! வா!
பங்கவிருள் நீக்கி,ஒளி பாய்ச்சியுல கின்புறுத்தும்
பண்பிலிறை சமமானாய் வா!
உங்களிருவீர் வடிவும் உள்ளமெலாம் தண்மைதரும்
ஒண்மைசமம் அம்புலிவா வா!
சங்கடங்கள் இல்லாமல் தந்தமுகன் கைதழுவிச்
சால்மகிழ்வோ டாடிடவா! வா!

வானகத்து வீதியிலே மல்கொளியைப் பெய்துசெலும்
வண்ணஎழில் அம்புலிவா வா!
ஞானசித்து மேனியனாம் நங்களிறும் நீயும்உரு
நண்ணெளிமையில் நிகர்க்கின்றீர்!
கூனுபிறை நீகொளுவாய் கொம்பிலிரு பாதிப்பிறை
கொண்டிடுவான் எங்களிறையும்!
வானவிளிம் பில்எழுங்கால் மஞ்சளுரு மன்னுவைநீ
மன்னுமிறை மஞ்சள் உருவும்!
ஈனமுறத் தேய்ந்தலைய இட்டமுனைச் சாபமதால்
எய்துகின்றாய் மோதகம் நீயும்!
தேனினிய சர்க்கரை வாசம்திகழ் பாசிப்பருப்பு
சேரும்மோத கம்உடைத்தெங்கோ!
ஆனதன்மை ஒற்றுமைகள் ஆர்ந்தஇருவீர் மகிழ்ந்தே
ஆடிடவா! அம்புலிவா வா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானதத்த தானதத்த சந்தநடம் ஆடிடநீர்
தக்கநந்தி தாளமிடுவான்!

மேலவன்நீ வானில்!என்றும் மேலவன்மண் விண்ணிலவன்!
மேன்மைசமம் கொண்டவர் நீங்கள்!
சாலும்நண்பன் இந்திரற்குச் சந்திரன்நீ! தந்தமுகன்
தானும்இந்தி ரற்கினியவன்!
மாலையொளிர் கின்றவன்நீ! வணங்குமன்பர் சூட்டும்மலர்
மாலையில் ஒளிர்வன் ஐங்கரன்!
மேலும்பல் விதங்களிலே வெண்ணிலவே கரிமுகனை
மிகநிகர்த்தாய் ஆடிடவா!வா!
பாலெனவே பசியமணல் பளபளக்கும் சந்நிதியில்
பண்ணவனோ டாடிடலாம் வா!
ஆலின்விழுது ஆர்க்கஅணில், அழுதுருளும், அடியழிக்கும்
அடியர்மலி வீதிப்பதியில்
வேலவன் அண்டைமனையை விட்டுவந்து பங்குறவே
மேவிவிளை யாடிடவா! வா!
பாலகர்தம் பண்ணிசைகள் பம்பும்அருள் மண்டபத்தில்
பாடிமகிழ்ந் தாடிடலாம் வா!

## பேதம்

சேர்ந்துமகிழ் காதலர்க்குத் தேன்மழையாய் ஒளிபொழிவாய்
தீய்த்திடுவாய் பிரிந்திருப்போரை!
சோர்ந்து பிரிந்திருக்கும் அந்தச்சோடிகளும் மணங்குலவிச்
சுகிக்கஅருள் செய்யுமெங்கள் கோ!
ஊர்ந்திடற்கென் றொருவழியே உனக்குளதெம் ஆண்டவற்கோ
உலகமெலாம் ஞானஉலா தான்!
நேர்ந்தபழிச் சாபமதால் நித்தநித்தம் தேய்ந்துவளர்
நிம்மதியில் வாழ்வுபடைத்தாய்!
சார்ந்துபல கோவில்ஒரே சமயம்முழு உருவுடனே
தண்ணளிசெய் இன்பன்எங்கள் கோ!
ஆர்ந்தபல பேதம்உம்முள்! அத்தனையும் மறந்தெமய்யன்
அன்பிலிணைந் தாட அழைத்தான்!
தீர்ந்துனது சாபமெல்லாம், சீரடையத் துண்ணெனவே
தெண்ணிலவார் அம்புலிவா வா!
கூர்ந்துகளி, கண்குளிரக் கூத்திடல்நீர் காணஉள்ளோம்
கொஞ்சொளியார் அம்புலிவா வா!

கோயிலுனக் கில்லை! வெள்ளைக் கொம்பனுக்கோ கோவில்பல
கொன்றைநிழற் கோவில்தனில்வா!
சாயலொளி பகலிழப்பாய் சந்திரன்நீ! ஆனைமுகன்
தாங்கும்ஒளி சந்ததமும்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயும்புவி மானிடவர் அமெரிக்கர் அறிந்திடவும்
அடிதொடவும் எளிமை அடைந்தாய்!
தூயசிந்தை ஞானியரும் தொன்மறையும் தேவருமே
சொல்லரிய மருமமெங்கள் கோ!
ஆயபல வேற்றுமைகள் அறிந்திருந்தும் அருள்மிகையால்
அணைத்துவிளை யாடஅழைத்தான்!
தேயமெலாம் ஒளிபொழிந்தும் தெரிந்தொருநாள் விழாவெடுக்கார்
சிறுமையுன தொழிக்க நினைத்தான்!
காயும்உன தொளியிரவில் கள்வர்பயங் குறைக்குமந்தக்
கருணைதனை நினைந்தழைத்தான் வா!
நாயகனாஞ் செகராசன் நல்லசிங்கை நகரமர்ந்தோன்
நாட்டுதளி அம்புலிவா வா!

## தானம்

மோதகத்தோ டவல்பொரிகள் மூக்குமுட்ட உண்டிடவே
முக்கணிறை தந்தருள்வான் வா!
ஆதரவாய் ஆடிடக்கால் அணைத்துவிளை யாடிடக்கை
அருள்புரிவான் அம்புலிவா வா!
மாதம்முழு தும்உலவி, மண்ணுலகு காவல்செய்வாய்
வழங்கும்இறை சம்பளமும் வா!
ஆதியில்,தான் ஆடநடம் அங்கமெல்லாம் துள்ள,நகை
யாடிஅடை சாபம் விலக்கிக்
காதலுடன் ஆவணியின் கண்சதுர்த்தி தனிலுனையும்
கண்டுதொழின் புண்ணியம் என்பான்!
நாதமுதல் ஓம்ஒலியின் நாயகனாம் தந்தமுகன்
நண்ணினுவைக் கோவில்தனில் வா!
வேதியர்க்குங் கீதமன்றி வேதமன்றி வேடமன்றி
வேண்டும்மனத் தூய்மையே என்போன்
பூதலம்மேல், கீழ்உலகில் புண்ணியர்கள் நெஞ்சுருகப்
புரியநடம் அம்புலிவா வா!

தேய்ந்தருகித் திரும்பிவளர் சிறுமைதருஞ் சாபமதைத்
தீர்த்துவிமோ சனம்தரல்கூடும்!
பாய்ந்துனையே தழுவவெனப் பரிதவிக்கும் பொங்கலைகள்
பார்த்தடையும் உன்பயமும்தான்
ஓய்ந்திடவே ஆழியுன துந்தல்விடு மாறருள்வான்
ஒய்யெனவே அம்புலிவா வா!
ஆய்ந்துதமிழ் நூல்பலவும் ஆக்கியெழில் நூல்பலவும்
ஆன்றதமிழ் காத்துவளர்த்த
தீந்தமிழ்ச்சிங் கையரசர் திருவரிசை தனிலுதித்த
செகராசன் மெய்த்தளியின்கண்
வாய்ந்தமனப் பக்தர்குழாம் மண்டியமர்ந்தே மகிழ
வைக்கநடம் அம்புலிவா வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்ந்துமழைக் கார்த்திகையில் தொல்விரதம் பேணடியர்
சொக்குநடம் செய்திடவா வா!
தீந்திமிதோம் தாளமிடச் சேர்ந்துநந்தி மத்தளமும்,
செய்ய,நடம் அம்புலிவா வா!

## தண்டம்

அடித்தொண்டர்க் கருளவென அசையாமற் குந்துவதால்
அமைந்தஉவ மைத்தொடராகும்
பிடித்துவைத்த பிள்ளையெனும் பெரும்பட்டங் கொண்டவனாம்
பேழைவயிற் றைந்துகரத்தோன்!
நடத்துதிரு விளையாடல், நர்த்தனங்கள் யாவுமிவன்
நல்லடியர்க் காகப்புரிவோன்!
எடுத்தபணி இன்னிறைவை எய்தஉல கோர்வணங்கும்
எங்கள்குரு ஞானமுதல்வன்
கொடுத்தமரி யாதையிலே குளிர்ந்துவர வில்லையெனில்
கூனுபிறை அம்புலிநீ, ஆம்!
அடுத்துநடக்கும் உனக்கே ஆயிரமாம் விக்கினங்கள்!
ஆடிடவா! அம்புலிவா! வா!
ஒடித்தஒரு மருப்பதனால் உருப்பெரியன் கஜமுகனை
ஒடுக்கிஎலி வாகனங்கொண்டோன்!
விடுத்தஅழைப்பை மதித்து விண்துறந்து வந்திடுவாய்
வெள்ளிஅம்பு லி!உடனே வா!

பாபமெலாந் தீர்த்தடியர் பவநலிவைப் போக்குபவன்
பாகனிலா யானைமுதல்வன்!
சாபமெலாம் தீர்த்தருளிச் சர்ப்பஉரு நீங்கிடமால்
தண்ணருள்செய் கண்ணுதல்மெய்யன்!
பாபுனையும் பாவலர்க்குப் பல்பரிசு தந்துதமிழ்
பல்குவளம் உய்த்த சிங்கைதன்
கோபரவி வைத்ததளி கூடிமகிழ் ஆனைமுகக்
கொண்டலுடன் ஆடஇங்கே வா!
நீபெரியன் என்றதிமிர் நெஞ்சிருக்கும் என்றிடிலோ
நீறுநிலை இந்தநொடியே!
வாபெரியன்! தாகவிதை! வாழி!எனக் கச்சியப்பன்,
மாண்கபிலர் அருணகிரியார்
பூபொழிஔவை, அடியர்ப் புகழ்ந்தசேக்கி ழார்போன்றோர்
போற்றுமிறை எங்கள் களிற்றோன்!
கோபமுற முன்குதித்துக் கோவிலிடை வந்திடுவாய்
கொங்கொளிசேர் அம்புலிவா வா!

பட்டுநிலா பளிங்குநிலா பாவில்எல்லாம் ஒளிரும்நிலாப்
பட்டமெல்லாம் பெற்றஅம்புலீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டபனம் பழம்போலத் தூயவொளி தான்கருகிச்
சோர்ந்துவிழ முன்னம்வருவாய்!
மட்டவிழ்பூ மாலைகளை மலைமலையாய்ச் சூட்டடியார்
மங்களமாம் எங்களிறைகால்
தொட்டெழுந்தே சுந்தரமாய்த் துள்ளுநடம் ஆடுவதால்
சொர்க்கசுகம் நண்ணவருவாய்!
கெட்டவர்கள் கிட்டவிடாக் கீதவொலித் தண்டையடிக்
கீர்த்தியனோ டாடிடவாவா!
கொட்டமடங் கிடஅசுரர் கும்பலழி வெங்கரியின்
குட்டிதுதிக் கைதழுவ வா!
கொட்டுமுழக் கோசைநடு, கொஞ்சொலியாழ் ஓசையொடு
கொள்கைநடம் ஆடிட வாவா!
பட்டறிந்த இலக்கணசுந் தரியவளின் பழங்கதையைப்
பற்றியுணர்ந் தம்புலிவா! வா!

## 8-சிற்றில் பருவம்

வசையால் சோர்ந்தும் வாழ்த்தில் கொழுத்தும்
வழியே தவறாத
பசியால் நொந்தும் பணத்தால் மீந்தும்
பாவம் நினையாத
அசையா உறுதி அள்ளித் தந்த
ஆனை முகவோனே!
நிசமாய் அறமே வெல்லும் ஈற்றில்!
நில்லவ் வழியென்போய்!
இசைய என்றும் என்றும் வெற்றி
ஈவோய் அறத்திற்கே!
திசைகள் தோறும் சென்றுன் கோவில்
திகழ்த்து செகராசன்
நசையோ டிணுவை நகரில் பண்டு
நாட்டைங் கையோனே!
கசனுன் வீதி மணலில் கட்டெம்
கவினில் சிதையேலே!

கொன்றை மரங்கள் குளிர்பூ நீழல்
கொஞ்சும் திருவீதி
ஒன்றும் பொலியும் ஒளியார் மணலில்
உவகைச் சிறுபெண்கள்
துன்றிக் கூடிச் சொகுசாய்க் குந்திச்
சுடருஞ் சிற்றில்கள்
ஒன்றாய்ப் பலவாய்ச் செய்தோம்! இங்கே
ஓடி வருகின்ற
கன்றுக் களிறே கஜமு கத்துக்
கயமை அசுரனினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சிதைத்த வாறெம் சிற்றில்
அழிக்கா தருள்செய்க!
வென்றிக் கரசே! வேழத் தெழிலா!
மிதியேல் சிதையேலே!
உன்றன் உண்மைத் தொண்டர் செய்த
ஒள்ளில் சிதையேலே!

ஞானம் எங்கும் எங்கும் பரவ
நாளும் அருள்வோனே!
ஈனத் துன்பம் துயரம் தீர்க்க
ஏத்த அருள்வோனே!
கூனும் வயதில் கூட ஆசை
குறையாச் சண்டாள
ஏனக் கூட்டம் போலோம் நாங்கள்
இயற்றோம் எப்பழியும்!
நீநன்றென்ப மட்டும் செய்வோம்,
நினைவோம், பேசிடுவோம்!
வானும் மகிழத் தமிழன் ஆண்ட
வளமார் யாழ்ப்பாணக்
கோனன் றமைத்த கோவில் இறையே!
குழப்பேல் எம்சிற்றில்
தேனும் பாகும் பருப்பும் தருவோம்!
சிதையேல் எம்சிற்றில்!

பூவின்மிசைநற் பெற்றோர் தாமே
புதல்வர்க் குலகென்ற
தாவில் ஞானக் கருத்தைத் தந்து
தம்பி தனைவென்று
மாவின் கனியை வாங்கிக் கொண்ட
மறைகள் கடந்தோனே!
யாவர் தமக்கும் தாய்தந்தையாம்
ஐங்கை ஐயன்தான்
தேவன், உலகம், குருவும் நமக்காய்த்
தெளிந்த பெண்கள் நாம்!
கூவிப் பாடி உன்றன் புகழைக்
கூடிக் குந்திப் பொன்
கோவில் வீதி மணலில் வைக்கும்
குற்றில் குலையேலே!
சேவிப் புண்ணும் சிலம்புக் காலால்
சிற்றில் சிதையேலே!

இருவர் சிவன்கள் என்னும் வண்ணம்
ஏற்றம் மிகுமீசா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால், பிரமா, தேவர், பூதர்
சித்தர் யாவர்க்கும்
பெரியோய்! பிரமச் சாரி என்பர்!
பெண்கள் இரண்டென்பர்!
ஒருபேச் சுரையோம் உன்றன் இகழ்வாய்!
உனையே தொழுகின்றோம்!
அரசன் தமிழன் ஆண்டி யானான்!
ஆனால் அவன்வைத்த
அரசன் நீயோ என்றும் அரசன்!
ஆளல் வேண்டும் எமை!
வருவோம் பூசை தோறும் உன்றன்
வாழ்த்துப் பாடிடுவோம்!
குருவே குலையேல்! எங்கள் குற்றில்
குலையேல்! குலையே லே!

மஞ்சம் தருவோம்! கோபுரம் தந்தோம்!
வண்ணத் தேர்தந்தோம்!
கொஞ்சம் தந்தோம் வாக னங்கள்!
குளிர்பூங் காதருவோம்!
விஞ்சும் பகட்டே அற்றோம்! அதுபோல்
வேடம் நடிப்பற்றோம்!
பஞ்சம் இல்லைப் பரியுன் அருட்குளம்
பக்தி தூய்மைக்கு!
நெஞ்சம் தூயர் நித்தத் தொண்டால்
நிறைவு நிறைந்துண்டு!
தஞ்சம் தந்து காத்திங் கிணுவைத்
தக்கோர்க் கருள்வோனே!
பிஞ்சுக் கரங்கள் பெருகுன் மணலில்
பிள்ளை விளையாட்டாய்க்
கொஞ்சி வைக்கும் குற்றில் குலையேல்
குற்றில் குலையேலே!

அற்றைக் கற்றை வேளா வேளை
ஆற்றுக பசி!போதும்!
மற்றைச் செல்வம் மமதை செய்யும்!
மாய்க்கும் மதியோம்நாம்!
சற்றைப் பொழுதும் சகத்தை மதியோம்
தாழோம்! என்போர்சூழ்
ஒற்றைக் கொம்பா! பற்றுப் பற்றைகள்
ஓங்கிய நெஞ்சேத்தாக்

கொற்றம் கொண்ட இணுவைக் கோவே!
குழந்தைப் பெண்கள்நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றில் செய்யத் தொடங்கும் போதே
தேங்காய் உடைத்தேத்தாக்
குற்றங் குறைகள் பொறுத்தல் வேண்டும்!
குலையேல் நம்சிற்றில்!
செற்றங் கோள்ளேல் திருவைங் கரனே
சிதையேல் நம்சிற்றில்!

நீட்டும் துவக்கின் நிரையுள் கூட
நித்தம் திரிகின்றோம்
காட்டு மிருகக் கால்கள் ஊடும்
களிப்பாய் நுழைகின்றோம்
சூட்டுத் தணலின் சுடரில் கூடச்
சுகமாய் நடக்கின்றோம்!
ஊட்டுங் காக்குங் கரங்கள் ஓரைந்
துண்டே துணைக்கென்றுன்
கோட்டந் தொழுவோர் கூறக் கேட்போம்
குளிர்வோம் குகற்கண்ணா!
கூட்டுங் குவியல் மணலிற் குந்திக்
கூடிச் சிறுமியர்கள்
நாட்டுஞ் சிற்றில் நம்பன் மைந்தா!
நலியச் சிதையேலே!
நாட்டைக் கொளுத்தா "அதியுத் தமனே!"
நல்லாய் சிதையேலே!

உலக வாய்கள் தம்முள் அதிகம்
ஊத்தைப் பொய்வாய்கள்!
உலகம் சொல்லும் புகழும் இகழ்வும்
உண்மை அற்றவைகள்!
நிலவுச் சடையன் மைந்தன் நீசொல்
நெறியில் வாழ்கூர்த்த
புலமை உடையோர் போற்றித் தொழவே
பொலிந்திவ் விணுவையிலே
நலஞ்செய் தமரும் நறியா! சிவனும்
நாடித் தியானஞ்செய்
தலைமை இறைவா! பொழியும் மாரி
சாடும் வெள்ளத்தில்
பொலியும் மணலில் பொய்யில் பெண்கள்
பொருந்தி உன்வீதிப்
பலவாய்ச் செய்யும் சிற்றில் சிதையேல்!
பழையா சிதையே லே!

கொல்லும் பழியிற் கூட்டும் புலவூண்
கொள்ளும் நாவிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வழியைச் சிக்கல் வழியாய்ச்
சிதைக்குங் கள்ளிச்சை
இல்லா மேன்மை இயல்பை எம்முள்
ஈந்து காப்பவனே!
"எல்லாம் நம்நம் பரிபக் குவத்தின்
ஏற்றம் அறிந்தே நீ
ஒல்லும் வழியில் உதவும் பலங்கள்"
உரைப்பர் உன்னடியார்!
கல்லா நாமும் கருதில் உன்னைக்
களிப்பை நல்கிணுவை
நல்லாய்! எங்கள் நயமில் சிற்றில்
நண்ணிச் சிதையேலே!
சல்லென் சிலம்புச் சப்பைக் காலால்
சாமீ! சிதையேலே!

# 9-சிறுபறைப் பருவம்

பொறைகனிந்த பொன்னுருவே! இணுவைப் பூமி
பூத்தமுதல் இறைவடிவே செகரா சன்தன்
இறைமுதலே! ஓமென்னும் ஒலியின் ரூபா!
எண்ணில்லா அண்டங்கள் எழுந்த வித்தே!
மறைகட்கு முதல்வோனே! மறைக ளுக்கும்
மறைவோனே! மண்பக்தர் மனங்கள் என்னும்
துறைகட்குப் பெருநீரே! மனத்தில் மாசு
துரந்திடலே முத்திக்கு மூலம் அன்றி
வெறும்போலிக் கிரியைஆ சாரந் தம்மால்
விடிவில்லை! வேண்டும்மனத் தூய்மை மேலாய்!
பிறவிக்குள் சிறைபடைவை பிழைகள் நீக்கிப்
பேரின்ப முத்திநிலை காண்பீர்! என்று
பறைகொட்டிப் பிரசித்தம் போடும் பாங்கில்
பண்ணவனே தும்துமெனப் பறைமு ழக்காய்!
நிறைநிலவே நெஞ்சமெல்லாம் இனிக்குந் தேனே!
நிம்மதியே தும்துமெனப் பறையைக் கொட்டாய்!

குருந்தமர நீழலிலே ஞானம் பெற்றார்
குதிரைகொளச் சென்றமணி வாச கர்தாம்!
இருந்தவெள்ளை அரசின்கீழ் ஞானம் பெற்றான்
இளந்துறவி கௌதமனும்! ஆனால் இன்று
வரிந்தபனம் பாளையினால் ஞானம் பெற்ற
மாமேதைக் கூட்டத்தார் இறையேற் காமை
தெரிந்துமகங் காரத்தாற் பழிகள் செய்து
தீயுண்பார்! வெட்டுண்பார்! செல்வம் கெட்டே
திருந்திடுமெய்ஞ் ஞானத்தைப் பெறுவார்! உன்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தத்தை அறிந்துநிதம் நடக்கும் பத்திப்
பெருந்திண்மை எமக்கீந்த பிள்ளைத் தேவே!
பெரும்பான்மை சொல்வதெலாம் சரியென் றெண்ணி
வருந்துநிலை நாம்வீழா தருள்செய் தோனே!
மனஞ்சிலிர்க்கும் நாதமணிக் கோபு ரத்தோய்!
மருந்தனைய அருளால்வல் வினைகள் தீர்க்கும்
வைத்தியனே! வண்கையால் பறையைத் தட்டாய்!

கவலைகளிற் கழிகின்ற கணமொவ் வொன்றும்
காலன்கைப் பட்டழியும் சாவுக் காலம்!
தவமுனைவில் சிவநினைவின் கழிம கிழ்வில்
தழைக்கின்ற சிலநொடியே வாழ்வுக் காலம்!
அவலங்கள் கவலைகள் அலைக்குங் காலும்
ஆனைமுகன் உன்நினைவில் மூழ்கி உள்ளம்
இவைதூசி! இறைதீர்க்கும் என்றி ருக்க
இடர்நீக்கி எனையாளும் இன்ப வேந்தே!
நவமணிகள் நன்நிதிகள் புகழ்போற் றல்கள்
நயந்தினிக்கும் நிலைநில்லா இன்பம் வேண்டேன்!
சிவனிருக்கும் கைலாயம் சிலநொ டிக்குள்
திருக்கையால் ஔவையினை எடுத்து வைத்த
செவிபெரிய திருப்பிள்ளாய் திரள்பூங் கையால்
சிறுபறையை எடுத்து,ஏத்தும் அடியார் பாவம்
துவைபடவே தும்தும்மென முழக்காய் ஐயா!
தூயதிருக் கையாலே முழக்காய் ஐயா!

பொன்பொருளில் மங்கைபுகழ் பதவி மீது
போதைமிகும் பற்றுதரும் துன்பம்! உண்மை!
அன்பருளம் ஆளும்உன் கோவில் மீதாம்
அப்பற்றும் துன்பந்தரும் புதுமை கண்டேன்!
மின்பிரபை வீசுதிரு மேனி தாங்கும்
விநாயகனே! இணுவிலுறை வேத வித்தே!
என்சிறிய இல்லத்தில் இருந்தும் உன்னை
ஏத்துமின்பம் பலகோடி எய்த வைப்பாய்!
முன்பு,தவ முனிவரெலாம் தவத்தில் ஆழ்ந்தார்
மூர்க்கம்மிகு யானை,புலி, கரடி, சிங்கம்
என்பமலி வனங்களிலே! இடரே இல்லை!
இன்றெம்மூர் களில்வாழும் கரடி, சிங்கம்
மின்னலிடும் திருநீற்றுக் குறிக ளோடும்
வேதசிவா கமங்கற்ற பட்டத் தோடும்
புன்மதிகொண் டியற்றுகின்ற கொடுமை கோடி!
புனிதமிவர்க் கீந்துபறை முழக்காய் ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம்முதல் உட்பகைகள் ஆறும் வென்றால்
 காசினியில் வெளிப்பகைவர் அஞ்சித் தாழ்வர்!
ஆமையென ஐம்பொறிகள் அடக்கும் ஆற்றல்
 அமைந்தவர்க்கே துன்பங்கள் தொலையும்! அந்தச்
சேமநிலை சித்திக்கும் வெற்றிக் கெல்லாம்
 செகராச சேகர!நின் னருளே காலாம்!
மாமன்நெடு மாலவன்தன் நேமி மீட்கும்
 வண்ணம்நகைச் சுவைபுரிந்த விகடா! போலிச்
சாமிகளின் மாயவலை வீழா வண்ணம்
 சமயகுர வர்நெறிகள் சாரும் வண்ணம்,
நாமமது சைவனெனக் கொண்டும் வாழ்வோ
 நாசமுறும் வழிகளிலே செல்லா வண்ணம்,
ஓமெனுமப் பிரணவத்தின் மூல நாதம்
 ஓங்கிடவே பறைமுழக்காய் ஐந்து கையா!
பாமரர்போல் நடக்கின்ற படித்தோர் தாமும்
 பண்புறவே பறைமுழக்காய் ஐந்து கையா!

பஞ்சகர்த்தா மாரில்லாப் புனிதத் தாலே
 பாவவழிப் பணங்குவியாப் புனிதத் தாலே
நெஞ்சுசுத்த மணியம்தன் காப்பி னாலே
 நித்தநித்தம் பூசைபெறும் பிள்ளை யாரே!
மஞ்சுதவழ் மலைச்சாரல் வனங்கள் தோறும்
 வலியதவம் இயற்றுமருள் முனிவர் மாரின்
நெஞ்சுதவழ் செஞ்சடையான் மைந்த! அந்த
 நீலமயில் வாகனத்தன் அண்ணா! தெய்வக்
குஞ்சரமே! எவ்வெந்த வடிவில் என்னை
 கும்பிட்டா லும்அவ்வவ் வடிவில் தோன்றி
மிஞ்சருளைப் பொழிவெனென உணர்த்தி நின்ற
 மேலாம்ஓர் நாயகனில் விநாயக கப்பேர்ப்
பஞ்சமுகா! பாவியர்தம் அகந்தை மூல
 ஆணவத்தீப் பாம்பொடுக்கும் இடியோ சையாய்
விஞ்சைமிகும் பறைகொட்டி விளையா டையா!
 வேதவொலிப் பறைகொட்டி விளையா டையா!

அன்னியர்கள் ஆட்சியிலே உன்றன் கோவில்
 அந்தமிழூர் தோறும் இடியுண்ட வேளை
முன்னறிந்துன் அடியவர்கள் கிணற்றில், மண்ணுள்
 மூடிவைக்க ஒளித்திருந்து நேரம் நண்ண
உன்னியெழுந் தாலயங்கள் மீண்டும் பூத்த
 உத்தமனே! அப்பொழுதும் இந்தக் கோவில்
தன்னிலசை யாதிருந்தாள் தலைமை மூர்த்தீ
 தந்தரிய நறும்பூசை கைகள் கூப்பிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிமிசைக் கொண்டடியார் ஏத்த அன்றும்
திகழ்பருத்தி யடைப்பிருந்த தெய்வக் கோவே!
தின்னுமனத் துயரமெலாம் அடியர்க் கோட்டச்
சிந்துரக்கைத் தலஞ்சிவக்கத் திகழும் மேனி
தன்னிலெலா அங்கமுமே தாளத் தாட,
தங்கிணுவைத் தளிகளிக்கப் பறையைக் கொட்டாய்!
என்னதிருக் கோயிலிலும் முதலில் பூசை
ஏற்றருள்வோய்! ஏந்துசிறு மேளங் கொட்டாய்!

தப்பாமற் பாவிகளைத் தடியும் உன்றன்
சன்னதங்கள் அறியாமல் இற்றை நாளில்
துப்பாக்கிக் கூட்டங்கள் தூர்த்துன் கோவில்
தூக்கியுன்னை எறிகின்றார் அயலில் பொங்கும்
உப்பாழிச் சமுத்திரங்கள்! உரம் பிளக்க
உரியதொரு நாள்வைத்துக் காத்தி ருப்போய்!
துப்பாரும் திருமேனி இணுவில் ஏத்தச்
சுடர்ந்திருக்கும் கணபதியே! இணுவை யூரில்
இப்படியே பரராச சேக ரக்கோன்,
எழிற்கருணா கரத்தொண்டை மான்வைத் துள்ள
அப்பழைய கோவில்கள் அமர்ந்தே ஆளும்
ஐங்கரனே! கல்வளையில், சுழிபு ரத்தில்
ஒப்பமரு தடி,நல்லை, மாமாங் கத்தில்
ஊரனைத்தும் ஈழத்தில், தமிழ்நாட் டின்கண்,
செப்புலக நாடுகளின் நகரந் தோறும்
சென்றமர்ந்தீர்! சிறுபறையை முழக்கீர் ஐயா!

வருந்துயர்கள் அனைத்தும்நாம் நாமே செய்யும்
மலந்தூண்டும் பிழைகளினால் வரும்!இவ் வுண்மை
தெரிந்து,மனம், சொல்,செயலில் பிழைதவிர்த்துச்
செம்மையுற விழிப்புடன்நாம் வாழ்ந்தால் இன்பம்
பொருந்தவைக்குஞ் செயல்களிலே புகுத்தி எம்மைப்
புகழ்முத்தி சேர்விப்பாய்! பொறுத்து நெஞ்சம்
இருந்துன்னை ஏத்தி,இராப் பகலாய் ஆன்ம
இன்பத்திற் களித்தாட வைப்பாய்! அந்த
வரம்வழுத்தி வேண்டுமெனைப் போன்றோர்க் கெல்லாம்
மனவடக்கப் பயிற்சிதரும் வறுமை தந்தும்
பெருங்களியார் கிளரான்ம இன்பம் தந்தும்
பிறவியெனும் பிணிதீர்க்கும் மருந்தே! மாந்தர்
இரும்புமனங் கனியவரும் எலிமே லோனே!
எம்மிணுவைக் கோ!பறையை முழக்கி ஆடாய்!
சுரும்பிசைக்கும் தொல்பதியில் தும்பிக் கையா!
துந்துமெனச் சிறுபறையில் தட்டி ஆடாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடென்றாய்! பாடுகின்றேன் ஐயா! இந்தப்
பாட்டெல்லாம் நீதந்த பாட்டு! சென்னி
சூடென்றாற் சூடேனோ உன்றன் கால்கள்?
துயர்தீர்க்கும் திருவடியென் தலைமேல் வைத்தால்
ஆடென்னா தாடிடுவேன் ஆனந் தத்தால்!
ஆரென்னிற் புண்ணியரே அப்பே றுற்றால்?
காடொன்றாம் உலகில்பேய், கரடி யாகக்
காசாளர், கற்றோர்கள் இருந்தூர்த் தூய்மைக்
கேடெல்லாம் புரிந்தாலும் பொறுமை பூண்டு,
கீதஞ்சேர் செகராசன் கோவில் விட்டே
ஓடற்கே எண்ணாமல் இருத்தல் எல்லாம்
ஓரைந்து விழுக்காடாம் உண்மைப் பக்தர்
ஏடொன்றும் பூசைக்காய் இரங்கி அன்றோ?
இச்செய்தி பரப்புதல்போல் முரசு கொட்டாய்!
கூடொன்றுள் குருவியெனச் சிறைப்பட் டின்னல்
கூருயிர்,நெஞ் சாறிடவே கொட்டாய் மேளம்!

## 10-சிறுதேர்ப் பருவம்

இனியன மிசைவோனே!
இனியன புரிவோனே!
வினைதுயர் களைவோனே!
விகடநல் நடமாடீ!
புனலிடை தினமாடிப்
புதுமலர்ச் சுமைதூவி
வனைகழல் தொழுவோரின்
மனவிழி அரங்கெல்லாம்
தினம்இமை யவர்பூத
நிறைகணச் சபைசீலம்
எனுமிவை படங்காட்டி
எழில்மகிழ் தருவோனே!
பனிபடர் கயிலாயம்
பரன்தளி அமர்வோனே!
புனைமலர்ச் சிறுதேர்கை
பொருந்திட உருட்டாயோ?

பருத்தியின் பசுந்தோட்டம்
பண்டமர் களிற்றோனே!
"திருத்திட நினையாதே!
திருந்திட நினை"என்று
கருத்தினில் அறைவோனே!
கணபதி இறையோனே!
செருக்களம் விழும்பூத
திருக்கணம் எழுவித்தோய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கனின் பழிநாடே
ஆம்இனும் இதுவென்னும்
திருப்புகழ் இலங்கைதன்
திருநகர் உறைவோனே!
அருப்பொடு மலர்துன்ன
ஆக்கிய திருத்தேரை
அருத்துமை சிவன்தூதர்
அருகுற உருட்டாயோ?

செறிஅரசு ஆல்வேம்பு
செங்கனி மாஞ்சோலை
சிறுமலர் மல்லிகைத்
தென்றலிற் குளிர்கோவில்
குறுகிய திருவீதி
குலவுமண் டபந்தன்னில்
குறுகுறு நடைகொண்டு
குஞ்சர முதல்வா!தண்
நறைபொழி மலர்தம்மின்
நலந்திகழ் சிறுதேரை
அறந்தரு திகழ்சிந்தை
அடியவர் இனம்ஏத்த
நிறங்கிளர் சிவன்,சக்தி
நின்கணப் பூதங்கள்
உறுமிமை யவர்வாழ்த்த
உவந்திழுத் துருட்டாயோ!

ஆழ்கடல் தனைத்தாண்ட
அம்மிகள் துணைக்கொண்டு
நாள்பல அழிந்தேனை
நாய்ச்சுருள் வால்நீட்ட
ஊழ்வினை வயத்தாலே
ஒய்வற முயன்றேனை
வாழ்வழி தனில்வைத்த
வள்ளலுன் திருக்கோவில்
சூழ்குளிர் நிழல்வீதி
சுகித்திடும் வகையுன்றன்
தாழ்தும்பிக் கையாலே
தங்கநல் வடம்பற்றி
"வாழ்க"என் னொலிபொங்க
வளரதம் உருட்டாயோ!
கேழ்கிளர் மலர்வாசக்
கிறங்குதேர் உருட்டாயோ1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்சைமந் திரம்சொல்லித்
திருக்குறி வைக்காமல்
ஆட்களின் பெயர்சொல்லி
அக்குறி புனை,ருத்தி
ராட்சமெய்ப் பூனைகள்
சுக்கிராச் சாரிகள்
காட்சியில் ஏமாறாக்
கருத்தெனக் கின்றீந்து
மாட்சிமை வழிகாட்டும்
வாரண முகத்தோனே!
கோட்குழு அண்டங்கள்
கொள்சரா சரம்யாவும்
சாட்சியாய்க் களிகூரத்
தண்மலர்த் தடந்தேரை
கேட்சிவன் உமைகாணக்
கிளர்ந்திழுத் துருட்டாயோ!

வலிமையில் ஒப்பில்லா
வரக்கஜமுகன் தன்னை
எலியென ஒடுங்கச்செய்
தேறிமேல் அமர்ந்தோனே!
நிலவிய தமிழன்தன்
நிகரறும் ஆட்சிக்கோர்
பொலிவுறு சின்னம்போல்
பூத்தவ இணுவைக்கண்!
கிலிபடக் கீழ்மைகள்
கெடஅடி யவர்பாவம்
நிலம்,கொடி நீள்வானில்
நிமிர்கிளை இவைதோறும்
மலிமலர் மிடைந்தின்பாய்
வனைந்தமென் தேர்தன்னை
அலைவுறுஞ் செவியீசா,
அங்கையால் உருட்டாயோ!

"கொலைசெயல் பிழையன்று!
கொலை!கொலை! எனஅஞ்சி
அலறுதல் தான்குற்றம்!"
அறவுரை இதுசொல்லும்
கொலைஞரின் மயமான
குவலயங் கோவில்கொள்
எலிமிசை யிறையோனே!
இணுவையின் உயிரோனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுமிழ் உன்தும்பிக்
கையினை நீட்டிப்பன்
மலர்மிடை இத்தேரை
வடமெடுத் தடியார்கள்
தலைமிசைக் கைகூப்பிச்
"சயசய" எனவாழ்த்தக்
குலவொளி வீதிக்கண்
கொண்டிழுத் துருட்டாயோ!

அடிமைகள் குடிமைகள்
ஆளுக்கிங்காள்! உன்றன்
அடிமைகள் மிகக்கொஞ்சம்!
ஆயினும் அஞ்சாத
திடமனம் நீநல்கச்
சிறப்புடன் நடக்கின்றார்!
முடிகொண்டு தமிழாண்ட
முன்னையாழ்ப் பாணத்தின்
குடிகண்டு தொழுதொன்மை
கொள்செக ராசையா!
படைகொண்ட பழியாள்வோர்
பலப்பலர் வந்தாலும்
இடியுண்ட பழியில்லா
இன்தளி உறைவோனே!
வடம்பற்றி இழுத்திந்த
வண்ரதம் உருட்டாயோ!

பொருவெறி அரசர்கள்
பொழிகுண்டு களின்வெப்பால்,
பெருகும்நம் கொடுமைகள்,
பிசகறப் பிழைவெப்பால்
உருகிடப் பனிப்பாறை
ஓங்கிடும் கடல்மட்டம்
விரைவினில் உலகத்தை
விழுங்கிடும்! போர்மூர்க்க
அரசுகள் இதையெண்ணி
அறநெறி தழுவாவேல்,
மருவியே அறப்பாதை
மானுடன் வாழானேல்
புரிபடும் சங்காரம்
புவிமுற்றாய்! குறியீடாய்க்
கரம்பற்றி இணுவைக்கோன்
கவின்ரதம் உருட்டாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்சொல்லும் உடன்பாட்டை
அறிவிக்குஞ் சொல்கூட
ஓம்சொல்லின் ஒலியாகி
உன்நினை வினைஓம்பும்
தேம்பயில் பொழில்வாழும்
செந்தமிழ் யாழ்ப்பாண
மாம்பொழில் பனை,தென்னை
வாழைகள் கமுகோங்கி
மேம்படும் இணுவைக்கண்
மேவிய கணநாதா!
கூம்புரு திகழ்வண்ணக்
குலமலர்ச் சிறுதேரை
நாம்நின தடியார்கள்
நடமிட உருட்டாயோ!
பாம்பணி பரன்மைந்தா
பரிந்திழுத் துருட்டாயோ!

**(இணுவில் செகராசப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ் முற்றிற்று)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டிதர்
# ச. வே. பஞ்சாட்சரம்

மண்ணைக் கண்ணில் சுமக்கும்
ஒரு மாபெரும் கவிஞன்!

இன்தமிழை, இறைவனை
அன்னை மண்ணை
அன்பொழுக உயிரில் எழுதும்
அமுதுக் கவிஞன்!

முத்தமிழ் நிலத்தில் ஒரு
மூதறிஞன்

அதனாலேதான்
பல பதக்கங்கள் இவனின்
கழுத்தைத் தேடிப் பறந்தே வந்தன

நூற்றுப்பத்துப் புத்தகங்களை
இவன் அரிதாரம்
ஆக்கிக்கொண்டான்

செகராசன் ஆக்கிய
செல்லப் பிள்ளையாருக்குச்
செந்தமிழ் மலர்களைச்
சூடிய மகராசன் ஆகினான்

இணுவைக்குப் புகழ்சூட்டிய
அணு இவன்

இறைவனை அதிரவைத்த
பறை இவனின் பாடல்கள்

பிள்ளையார் காலடியில்
பிள்ளையாய் நிறைபவன்

இன்றுமட்டுமல்ல நாளையும்
ஈழமணித்திரு நாட்டின்
எழுத்தோவியன் இவன்...

வாழ்க தமிழ் – வாழ்க பஞ்சு எனும்
இந்தப் பஞ்சாட்சரக் கவிஞன்!

– தேசபாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org